
ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி     சமய - சமூக - இலக்கிய வெளியீடு     ஒக்டோபர் 2010     25/=




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஒக்டோபர் 2010

மலர்- 42 இதழ்- 09

**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

**ஆலோசகர்கள்**
A.G. இராஜேந்திரம்
A.S. யோகராஜா

**கணினி வடிவமைப்பு**
நிரோசன்

**ஓவியங்கள்**
சுதா

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| புதிய பயணம் | - | 02 |
| நானும் என்... (கவிதை) | - | 03 |
| இலக்கிய மஞ்சரி | - | 04 |
| கடுகுக்கதை | - | 05 |
| கானா ஊர்... | - | 06 |
| மருத்துவம் (நீரிழிவு மற்றும்...) | - | 07 |
| ஈழத்தை அளந்த புனிதன் | - | 09 |
| மூன்று கிறித்தவ... | - | 10 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 13 |
| மாணவர் பக்கம் | - | 16 |
| தளிர் | - | 17 |
| பட்டம் (சிறுகதை) | - | 19 |
| உங்கள் சுகமான... | : | 24 |
| ஒலி மாசின்... | : | 25 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 25/=
ஆண்டு சந்தா : 400/=
(தபாற்செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...


சில ஆண்டுகளுக்கு முன்பு 'சிட்டிசன்' என்று ஒரு தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படம் வெளிவந்தது. அதனைத் தமிழ்த் திரைப்படம் என்று கூறவேண்டியது அவசியம். ஏனெனில் தமிழ் நாட்டிலிருந்து தமிழர்களால் தமிழில் தயாரிக்கப்படும் ஒரு திரைப்படம் ஆங்கிலப் பெயரை வைத்துக்கொள்வது நாகரீகமாம்.

அத்திரைப்படத்தில் அதிகாரிகளின் சுய நலத்தால் நூற்றுக்கணக்கான பரதகுல மக்கள் கொல்லப்பட்டு அக்கிராமமே இல்லாதொழிக்கப் பட்டது. நிலவரைபடத்திலிருந்தும் அக்கிராமம் முறைகேடாக அகற்றப்படுகிறது.

அண்மையில் வன்னி மக்களது நிலையை பத்திரிகையில் படித்தபோது 'சிட்டிசன்' திரைப்படக் கதை நினைவில் வந்து போனது. வன்னியில் இடம்பெற்ற **'மனிதாபிமான நடவடிக்கையால்'** வதைக்கப்பட்ட மக்கள் அகதிகளாக முட்கம்பிச் சிறைகளுக்குள் அடைக்கப்பட்டு பலவேறு கொடிய சித்திரவதைகளுக்குப் பின் மீள்குடியேற்றத்திற் கெனக் கொண்டு செல்லப்பட்டு இறக்கிவிடப்படு கிறார்கள். ஆனால் ஊர் போனவர்களுக்கு வீடு மில்லை, கடையுமில்லை, மரமுமில்லை, குளமு மில்லை, கோயிலுமில்லை, விவசாய நிலமுமில்லை, வீதியுமில்லை; மொத்தத்தில் ஊரே இல்லை; எல்லாமே அழிக்கப்பட்டு துடைத்தெறியப்பட்டுள்ளது. அனைத்தும் அழிக்கப்பட்டு அடையாளம் தெரியாதவாறு ஆக்கப்பட்ட இந்த நிலைமை போரினால் பாதிக்கப்பட்ட ஊர்களுக்கு மட்டுமல்ல, போரினால் பாதிக்கப்படாத கிராமங்களிலும் இதே நிலைமைதான் என்று அறியும்போது திட்டமிடப்பட்ட இந்த மனிதாபிமான நடவடிக்கைக்குப் பின்னால் ஒளிந்துள்ள பயங்கரங்கள் என்னவோ என்ற அச்சமே மேலோங்குகிறது. இந்த மனிதாபிமான நடவடிக் கையின் புகழை நாடு நாடாகப் பாடிக்கொண்டு தலைவர்கள் வலம் வருகின்றனர். இந்த அவலம் நிறைந்த மனிதாபிமான நடவடிக்கையின் எதிர்கால விளைவுகள் என்ன? இலங்கையில் தமிழர்களின் எதிர்காலம் எப்படி அமையப்போகிறது என்ற கேள் விகள் அக்கறையுள்ளவர்களின் தலைகளைக் குடைந்துகொண்டே இருக்கிறன.

அரச பதவி அதிகாரங்களை நீண்ட காலத் துக்குத் தக்கவைத்துக்கொள்ளும் வகையில் எடுக்கப் படும் அதிரடி நடவடிக்கைகள் இந்நாட்டின் எதிர் காலத்தை, இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் எதிர் காலத்தை எங்கு கொண்டுபோய் விடப்போகிறது என்ற அங்கலாய்ப்பும் கவலையுங்கூடப் பல்வேறு தரப்பினரிடமும் உண்டு. ஆனால் எல்லாத் தரப்பின ரது வாய்களும் ஊமையாகி, கைகளும் கட்டப் பட்டுள்ள நிலையில் 'எல்லா வினைகளுக்கும் எதிர் வினைகள் உண்டு' எனும் ஆன்மீக - அறிவியல் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டு மௌனித்துப் போகத்தான் வேண்டுமோ!

**- இணை ஆசிரியர்**



## இறைவாக்கு

**"எது நிகழ்ந்தாலும் நாங்கள் வழிபடுகின்ற எங்கள் கடவுள் எரிகின்ற தீச்சூளையினின்று எங்களை நீக்க வல்லவர்"**

(தானி: 3:17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பயணம்

உலகத்தைப் பார்த்து வியப்பதில் பயன் ஏதும் இல்லை. மாறாக உலகம் நம்மைப் பார்த்து வியக்கவேண்டும்.

நமது தெய்வம் இயேசுக் கிறிஸ்துவை அன்று உலகம் பார்த்து வியந்து நின்றது. காரணம் அவருடைய புதுமையான புரட்சியான கொள்கைகளும் கோட்பாடுகளுமே ஆகும். இவ்வுலக அரசராக பதவி உயர்த்த நினைத்த மக்களைப் பார்த்து மானிடமகன் மக்களின் கைகளில் ஒப்புவிக்கப்படவிருக்கிறார் என்று அதிர்ச்சியூட்டும் செய்தியைக் கூறி அனைவரையும் வியப்படையச் செய்கின்றார்.

விஞ்ஞானத்திலே Astro Physics என்ற விண்வெளி பற்றிய ஒரு பாடமுண்டு. இதனுடைய கருத்து விளக்கப்படி பாரமான எடையுடைய உயிரினங்கள் பறக்கமுடியாது. ஆனால் இந்த விஞ்ஞானக் கருத்து விளக்கத்தினை மறுத்து விடுவது போல ஒரு நிகழ்வு அமைந்து விடுகிறது.

ஓர் இனக் கருவண்டு பாரமான எடையும் மெதுமையான சிறகும் கொண்டது. இது பறக்கின்றது. இந்த ஆச்சரியமான நிகழ்வு எப்படி முடியும் என்ற ஆய்வை ஒரு விஞ்ஞானி ஆரம்பித்தார். இறுதியில் அந்த விஞ்ஞானி தந்த முடிவு: இந்தக் கருவண்டுக்கு Astro Physics தெரியாது. ஆனால், இந்தக் கருவண்டுக்குப் பறக்கவேண்டும் என்ற ஆசையும் இலட்சியமும் குறிக்கோளும் இருந்தது. இதனால்தான் இக்கருவண்டால் பறக்க முடிந்தது.

பதவி மோகம் இன்றுபோல அன்றும் இருந்தது. உதாரணமாக சதுசேயர்கள் காசு கொடுத்து தலைமைக்குரு பதவியையும் ஏரோது போன்றவர்கள் ஆளுனர் பதவியையும் பெற்றுச் சுகம் கண்டார்கள். இயேசுவின் வல்ல செயல்களாலும், போதனையாலும் கவரப்பட்ட மக்கள் இயேசுவை ஆட்சிக் கப்பலேற்றி அழகுபடுத்த ஆசைப்பட்டார்கள்.

ஆனால், இயேசுவோ பதவி பட்டங்களைத் தேடவில்லை. அவருக்கென்று ஓர் இலட்சியம் இருந்தது. இறைவனின் மீட்புத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்பதே அவருடைய குறிக்கோளாக இருந்தது. எனவே இயேசு அதிர்வைத் தரக்கூடிய வார்த்தைகளை உச்சரிக்கின்றார். மக்களுக்காகத் தன்னுயிரையே கையளிக்க இருப்பதாகக் கூறுகிறார். பதவி என்ற சுகம் காணவல்ல, மாறாக இலட்சியத்தோடு பணி செய்யவே அவர் வந்தவர் என்பதை தெளிவாக்குகிறார்.

மேலும், ஏழைகளின் பணியாளர் என்று போற்றப்பட்டவர் புனித வின்சன் டீ பவுல். 'நான் கடவுளுக்கும் ஏழைகளுக்கும் சொந்தம்' என்று கூற இவர் தயங்கவில்லை. தூய பவுல் கூறுவது போன்று 'எல்லோர்க்கும் எல்லாமாக நடப்போம், பிறருடைய துயர் துடைப்பதில் நெருங்கிய பங்கேற்போம்' என்பது போன்று நாமும் மற்றவருடைய கண்ணீர் துடைக்கின்ற கைக்குட்டைகளாக மாறவேண்டுமென்பதே இவரின் விருப்பமாகும்.

கி.பி 1581-1660 காலப்பகுதியில் வாழ்ந்து 'ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண முடியும்' என்ற கொள்கையுடன் வாழ நினைத்தவர், வாழ்ந்து காட்டியவர். அன்பே இவரது பிரதான புண்ணியம். ஏழைகளுக்கு உதவிக்கரம் நீட்ட பணக்கார வர்க்கத்தைத் தூண்டி எழுப்பினார்.


இயேசு, தன் வழி சிலுவை வழி என்கிறார். பதவியும் பட்டமும் அவரது கண்களை மயக்கவில்லை. இலட்சியத்தை உடைக்கவில்லை. மாறாக சிலுவையின்றி மீட்பு இல்லை என்பதை இயேசு அழுத்திச் சொல்கிறார்.

கிறிஸ்தவர்களாகிய எமக்கும் கிறிஸ்தவ விழுமியங்களை நோக்கிய குறிக்கோள் உண்டு. எம்மால் முடியும் என்ற மனத் துணிவுடன் வாழ்வில் வரும் சிலுவைகளைச் சுமந்து இறைசாயலோடு படைக்கப்பட்ட நாம் என்றும் இறைவனை நோக்கிப் பயணிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் என் கண்ணீரும்



மரணித்துப்போன மகா கவிகளே
கனத்துப்போன இதயத்துடன்
கையேந்திக் கேட்கின்றேன்
எழுந்து வாருங்கள்
புதியதொரு கவி வடிக்க

ஒரு சீசா மையுடன்
ஒரு பிடிக் காகிதமும் இருந்தால்
கணப்பொழுதில் மறப்பேன்
இப்பூவுலகை என்றுரைத்த பைரனே

ஒரு கிண்ணம் போதையும்
ஒருபிடிக் கூந்தலும் கிடைத்தால்
அதைவிடப் பாக்கியம்
வேறெனக்கில்லை என்ற உமர்கையாமே

ஒரு துண்டுக் காணியும்
ஒரு கோப்பைப் பால்நிலவும்
ஆயுளுக்கும் போதுமென்ற
புரட்சிக்கவி பாரதியே

கொஞ்சம் காது கொடுங்கள்
ஒரு பிடிச்சோற்றுக்கும்
ஒரு முழக் கந்தைக்குமாய்
கையேந்திக் கதறுகின்றது ஓர் இனம்

சிதறிய உடல்களும் சிந்திய குருதியும்
வெந்திட்ட உள்ளமும் விடிவற்ற வாழ்வதும்
உயிரற்ற ஜடங்களாய் உருக்குலைந்த மனிதர்கள்
ஏமாந்த வரலாற்றின் எச்சங்களாயினர்


படுத்துறங்கப் பாயுமில்லை
பசிபோக்கப் பண்டமில்லை
நோய் தீர்க்க மருந்துமில்லை
கழிவகற்ற வழியுமில்லை
முட்கம்பிச் சிறைகளுக்குள்
மூச்சு முட்ட வாழ்கின்றார்

அப்பனே பாரதி
நீ அன்றே போய்விட்டாய்.
இல்லையென்றால்
நீ கேட்ட கோப்பை நிலவையும்
பல்குழல் பீரங்கி பதம் பார்த்திருக்கும்
பெருமூச்சு வெளியில் மொழியறியா உணர்வுகளில்
நானும் என் கண்ணீரும்
கசிந்து... கரைந்து...

பைந்தமிழ்க் குமரன் டேவிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**'ஈழத்து தமிழ் அரங்கில் பெண் - ஒரு பெணிலைவாத நோக்கு'** என்ற தலைப்பில் ஜெயரஞ்சினி இராசதுரை அவர்கள் தனது முதுதத்துவமானி பட்டத்துக்காக செய்த ஆய்வு, நூலாக வெளிவந்துள்ளது. அதற்கு பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் எழுதிய முன்னுரையிலிருந்து ஒரு பகுதி.

பல்கலைக்கழக மட்டத்தில் பயிலப்படும் துறைகளை 'டிசிப்ளின்ஸ்' (Disciplines) எனும் பதம் கொண்டு குறிப்பிடுவது மரபாகும். இச்சொல் பொதுவாக கட்டுப்பாடான ஒழுக்காற்று நடைமுறையைக் குறிக்கும் ஒன்றாகும். ஒரு பயில் துறையை அதனுடைய நியமங்களுக்கு ஏற்பவும், அந்த நியமங்களில் இருந்து தவறாமலும், அதற்குரிய கட்டுப்பாடுகளை மீறாமலும் ஒரு பாடத்தினைப் பயில்வதுதான் அதனை டிசிப்ளின் (Discipline) ஆக்குகிறது. தமிழில் இதனை விதிமுறைநோக்கத் தவறா பயில்முறை என்று சற்று விரித்துக் கூறலாம்.

நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தைப் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்கள் நிலையில் அறிமுகப்படுத்தியபொழுது (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தான் நாடகமும் அரங்கியலும் தமிழ் மொழி மூலப் பயிற்சியாக முதல் பட்ட மாணவர்களுக்கான கற்கைநெறியாக நிறுவப்பட்டது. தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் பட்டப் பின்னிலையிலேயே நாடகம் அரங்கியலை ஓர் ஆய்வுத்துறை ஆக்கினர்) நாம் எதிர்நோக்கவேண்டியிருந்த பிரதான பிரச்சினை அதனை எப்படி ஒரு பட்டப்படிப்பாகக் கற்பிப்பது என்பதே. இம்முயற்சியின் தொடக்கத்தின்பொழுது பல அறிஞர்கள் ஏளனமாகவும், கிண்டலாகவும் நாடகத்தில் என்ன படிக்க இருக்கின்றது, அதுவும் பல்கலைக்கழகத்தில் என்று கலைப்பீடக் கூட்டம் முதல் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை வரை கேட்டது எனக்கு நன்கு நினைவுக்கு வருகிறது. இப்பாடத்தினைப் பயில விரும்பிய மாணவர் சிலர் இதனை ஏன் படிக்க வேண்டும் என சக மாணவர்களால் கேட்கப்பட்டு அம்முறைப்பாட்டை நமக்குத் தெரிவித்தனர்.

இன்று ஏறத்தாள 17 வருடங்களின் பின்னர் மீள நோக்குகின்ற பொழுது இத்துறையின் இன்றைய வளர்ச்சியினையே பதிலாகக் காட்ட முடியும். எனினும், இத்துறைவழிவரும் கட்டுப்பாடு, சிந்தனை ஒழுங்கினை அதன் இயல்பினை விளக்கவேண்டுவது அவசியமாகின்றது. பல்கலைக்கழக மட்டத்தில் பயிலப்படும் கற்றைநெறிகளில் முக்கிய அடிப்படை யாதெனில் அக்கற்கைநெறி மனிதர்களை, அவர்களது சூழலை, அவர்களது வாழ்க்கையை விளங்கிக்கொள்ள எத்துணை உதவுகின்றது என்பது தான். நாங்கள் பயில்கின்ற அக்கற்கை நெறியின் ஒழுங்கமைப்பு எமது சிந்தனை முறையினையே தீர்மானித்து விடுகின்றது. ஒரு பொருளியலாளன் மனித சீவியத்தை பொருளியல் ஒழுங்கின் அடிப்படையில் பார்க்கின்றான். ஒரு தாவரவியலாளன் மனிதனது தாவரச் சூழலை, தாவரங்களை மனிதத் தேவைகளோடும் மனித வாழ்வுக்கு அவை பயன்படக்கூடிய முறைமை பற்றியும் அக்கற்கைநெறி வழியாகப் பார்க்க வருகின்றான். உண்மையான ஒழுக்காற்றுக் கற்கைநெறி ஒவ்வொன்றுக்கும் (Disciplines) இதனைக் கூறலாம்.

அவ்வாறாயின் நாடகம், அரங்கியல் எவ்வாறு மானிட அறிவுக்கான வாயிலாகின்றது என்பது கேள்வி. நாடகம் என்பது அடிப்படையில் மனித முரண்பாடுகள் வழியாக வரும் மோதுகைகள் (Conflicts) பற்றியது. அந்த மோதுகையை கிரேக்கத்தில் அகோன் (Agon) என்பர். இதில் இருந்துதான் Agani அதாவது வேதனை, வாதனை வந்தது. இது கிரேக்கச் சிந்தனையோட்டத்தின் வெளிப்பாடு. சமஸ்கிருத மரபில்கூட நாடகம் அவலச் சுவையுடன் முடியாவிட்டாலும் மனித மோதல்களைச் சித்தரித்து இறுதியில் அவை நயம்பட நினைவு கூருவதாகக் கூறும். ஆக, நாடகம் என்பது மனிதர்களை அவர்களின் உறவுகளின் மோதுகை நிலையில் காண்பர். இப்பொழுது சேக்ஷ்பியரின் மேதாவிலாசம், இப்சனின் திறமை, யுஜினோவின் சாரம், காளிதாசனின் கவித்துவத்தின் அடிப்படை நமக்குப் புலனாகிறது. மீளச் சொன்னால் நாடகம் மனிதர்களை அவர்களது உறவின் அசைநிலைகளில் காண்கிறது.

நாடகம் நமக்கு மனிதர்களை பாத்திரங்களாகப் பார்க்க உதவி புரிகிறது. காய்தல் உவத்தல் அற்ற பார்வைக்கு இந்த நோக்கு அவசியம். ஒவ்வொரு பாத்திரத்துக்கு ஒவ்வொரு வகிபாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Role) உண்டு. இந்த வகிபாகங்களின் ஒட்டுமொத்த இணைவுதான் நாடகம். இராமாயணம் என்னும் நாடகத்தில் இராமனின் வகிபாகத்துக்கு உள்ள முக்கியத்துவம் இராவணனுக்கும் உண்டு, அனுமானுக்கும் உண்டு, விபீஷணனுக்கும் உண்டு, கைகேயிக்கும் உண்டு, சுமந்திரனுக்கும் உண்டு. மனித நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ள நாடகம் உதவுகின்றது. இன்னொரு வகையில் சொன்னால் இந்த விளக்கம் இன்றி மனிதரைப் புரிந்துகொள்ள முடியாது; மனித மோதல்களைப் புரிந்துகொள்ள முடியாது.

அரங்கு என்பது இதனைச் சித்தரிப்பதற்கான களம். அது நடிகர்களின் மூலமும், பிற கட்புல அனுசரணைகளுடனும் நிகழ்வது. இந்தச் சித்தரிப்பினைப் பழகுவதும், அதனைத் தயார் செய்வதுந்தான் அரங்கின் பணி. அரங்கில்தான் நாடகம் பார்வையாளர்களுடன் தொடர்பு கொள்கிறது. அதாவது அரங்கிலேதான் நாடகம் நாடகமாகின்றது. அரங்கு நாடகத்திற்கான வாயில். இந்த நோக்கு இவ்வியலைப் பயிலும் மாணவர்களிடையே படிப்படியாகப் பதியத் தொடங்க அவர்கள் உலகையும், மனிதர்களையும், மனித உறவுகளையும் அவர்களின் வகிபாகங்களையும் புரிந்துகொள்கின்றனர். இந்தப் புரிதல் வாழ்க்கை பற்றிய புரிந்துணர்வுக்கு அவசியமாகின்றது.

# கடுகுக் கதை 29 மனிதாபிமானம்

அன்ரன் அந்த முறைப்பாட்டுக் கடிதத்தை நன்றாக வாசித்தார். அதன் சுருக்கம்: ஒரு பையன் - பள்ளி செல்லும் வயது - சைக்கிள் கடையில் வேலை செய்கிறான் - சிறுவர் உரிமை மீறப்படுகிறது.

சடாரென்று பொலிசாருடன் பாய்ந்து சைக்கிள் கடைக்காரனையும், பொடியனையும் பிடிக்க அன்ரன் விரும்பவில்லை. சம்பவ இடத்துக்கு சைக்கிள் திருத்துவது போல் சென்றார். முறைப்பாடு உண்மைதான்.

பின்னணியை ஆராய்ந்தார். யுத்தப் பாதிப்பு. பொடியனுக்கு அப்பா இல்லை; ஊனமுற்ற தாயும் சிறு சகோதரியும் உண்டு; சைக்கிள் கடைக் கூலிதான் அக்குடும்ப வருமானம்.

சைக்கிள் கடை உரிமையாளருடன் பேசினார்; பையனின் தாயுடன் பேசினார்; பாடசாலை அதிபருடன் பேசினார். இப்போது பொடியன் பகலில் பாடசாலை செல்வான்; மாலையில் சைக்கிள் கடை செல்வான். அக்குடும்பத்திற்கு ஆதார நிதியுதவியொன்று அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் மூலம் கிடைக்கவும் ஏற்பாடு செய்தார்.

அன்ரன் அலுவலகம் சென்று அம்முறைப்பாடு தொடர்பான அறிக்கையை எழுதத் தொடங்கினார்.

".............. அம்முறைப்பாடு பொய்யானது. சம்மந்தப்பட்ட பையன் பாடசாலை



செல்கின்றான். மாலையில் சைக்கிள் கடையில் வேலை பயில்கின்றான். கல்வியுடன் தொழிற்கல்வியும் பெறுகின்றான்......."

சட்டப்படி போய் இருந்தால் சைக்கிள் திருத்தக உரிமையாளருக்கும் தண்டனை; பையனின் குடும்பமும் 'அம்போ'

அன்ரன் மனநிறைவுடன் வேறு கோப்புகளைப் புரட்ட ஆரம்பித்தார்.

- பற்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"**பெ**ண்களுக்குள் நீர் ஆசீர் பெற்றவரே! உம் வயிற்றில் வாழும் குழந்தையும் ஆசீர் பெற்றதே! என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்துரை எம் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள் குழந்தை பேருவகையால் துள்ளிற்று. ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" லூக் 1:42-44

கடைசியில் என்னுடைய மாசற்ற இருதயமே வெற்றி கொள்ளும் என்ற அன்னையின் வாக்குக்கு அமையவும், லூக்கா 1:48ல் குறிப்பிடப்பட்டுள்ள "இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறு பெற்றவர் என்பர்" என்பதற்கு அமையவும் எல்லா இனமும் எல்லா மக்களும் தேவ அன்னையினுடைய மாசற்ற இருதயத்திற்குள் ஒப்புக்கொடுத்து அவளைப் பேறுடையாள் எனப் போற்றுமே.

# கானா ஊர்த் திருமணத்தில் மரியாள்



திருச்சபையின் தொடக்கத்தில் மரியாள் திருச்சபையின் முதல் பெரும் தூணாக இருந்தாள். யோவான் நற்செய்தி கானா ஊர்த் திருமணத்தைப் பற்றி பல சம்பவங்களைக் கூறி நிற்கிறது. இதில் முக்கிய அம்சமாக பழைய சமயத் திட்டங்களை விடுவித்து புது சமயம், மதம் பிறக்கின்றது. யூத மதச் சட்டங்கள் ஒருபுறம் இருக்க இயேசுவின் வருகையுடன் திருச்சபை உருவாக்கப்பட்டது. அதை யோவான் தெளிவாகக் கானாவூர்த் திருமணத்தில் குறிப்பிட்டுள்ளார். கானா ஊர்த் திருமணத்திற்கு அழைக்கப்பெற்றவர்கள் யார்?

இயேசு அழைக்கப்பெற்றார், மரியாள் அழைக்கப்பெற்றார், மரியாளோடு சேர்த்து இயேசுவின் சீடர்களும் அழைக்கப்பெற்றார்கள். மரியாளின் வேண்டுகோள்: மகனே! இரசம் தீர்ந்துவிட்டது. அதற்கு இயேசுவின் பதில்: நான் என்ன செய்ய முடியம்? எனது நேரம் இன்னும் வரவில்லையே. ஆனால், மரியாள் சொன்ன வார்த்தை: அவர் சொல்லுவதை எல்லாம் செய்யுங்கள்.

இயேசு செய்த புதுமை தண்ணீரை இரசமாக மாற்றியது மாத்திரம் அல்ல. இது வெளி அடையாளமாக இருந்தாலும் உள்நோக்கம் ஒன்று இருந்தது. மரியாள் இறை திருவுளத்தையும் காலத்தையும் நேரத்தையும் தெளிவாகப் புரிந்துவைத்தவர். பழைய யூத மதம் பயனற்றுப் போகின்றது எனவே, புதிய திருச்சபை உருவாக்கப்படப் போகிற நேரம் வந்துவிட்டது என்பதைப் புரிந்துகொண்டாள். அதற்குரிய காலமும், நேரமும் வந்துவிட்டது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டாள். புதிய இரசத்தை இயேசு

8ம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு மற்றும் சிறுநீரக நோய்களிலிருந்து விடுபட

நீரிழிவு நோயும், சிறுநீரக நோய்களும் இன்று உலகெங்கும் பரவலாகக் காணப்படுகின்றன. இவை இரட்டைக் குழந்தைகள் போன்றன. நீரிழிவு நோயாளர்களுக்கு சிறுநீரக நோய்கள், சிறுநீரகச் செயலிழப்பு போன்றவை வருவதற்கு அதிக வாய்ப்புண்டு. இரத்தத்தில் அதிகரிக்கும் இனிப்பை வடிகட்டும் வேலையில் ஈடுபடும் சிறுநீரகங்கள் காலப்போக்கில் களைப்படைந்து அதன் செயற்றிறன் குன்றும்போது சிறுநீரக நோய்கள் ஏற்படுகின்றன. சிறுநீரக நோய்கள் ஏற்பட இன்னும் பல காரணங்களும் உண்டு. அவைகள் பற்றி ஏற்கனவே இத்தொடரில் குறிப்பிட்டிருந்தோம். நீரிழிவு மற்றும் சிறுநீரக நோய்களுக்கு ஆங்கில, ஆயுள்வேத, ஹோமியோபதி மற்றும் இயற்கை வைத்திய முறைகளில் பல்வேறு மருந்துகளும் சிகிச்சை முறைகளும் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை ஏற்கனவே குறிப்பிட்டிருந்ததைப் படித்திருப்பீர்கள். நோய்களைக் கட்டுப்படுத்தவும் விரைந்து குணப்படுத்தவும் மருத்துவச் சிகிச்சையோடு மென்மையான உடற்பயிற்சிகளும் தேவை. அப்போதுதான் தேவையற்ற கழிவுகள் அகற்றப்படவும் இரத்த ஓட்டஞ் சீராகி, பிராணன் எனப்படும் உயிராற்றல் உடல் முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டு, புத்துணர்ச்சியும் ஆரோக்கியமும் ஏற்படவும் நோய்கள் விரைந்து அகன்று உடல் நலம் பெறவும் வழி பிறக்கும். ஆங்கில மருத்துவமனைகளில் இத்துறையில் பயிற்சி பெற்ற 'பிசியோதெரபிஸ்ட்' என்று அழைக்கப்படும் பணியாளர்கள் உள்ளனர். மருந்தில்லா மருத்துவமான யோக சிகிச்சை முறைகளில் நீரிழிவு மற்றும் சிறுநீரக நோய்களைக் கட்டுப்படுத்தவும், குணமாக்கவும், தடுக்கவும் வல்ல பயிற்சிகள் உள்ளன.

**பிறையாசனம்**
**பாதகஸ்தாசனம்**
**நின்ற தனுராசனம்**
**அர்த்த திரிகோணாசனம்**
**முழுத் திரிகோணாசனம்**
**அறுகோணாசனம்**
**யோக முத்ரா**
**புஜங்காசனம்**
**தனுராசனம்**
**ஜானு சிரசாசனம்**
**பச்சிமோத்தானாசனம்**
**உத்தானபாதாசனம்**
**உத்திஸ்ட பாதாசனங்கள்**
**(முக்கியமானவை)**
**பவனமுத்தாசனம்**
**சர்வாங்காசனம்**
**ஹலாசனம்**
**மத்ஸ் ஆசனம்**

இவ்வாறு பல ஆசனங்கள் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தி சிறுநீரக செயலிழப்பைத் தடுக்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வல்லவை. இவைகளை நோயாளிகள் தங்கள் உடல்நிலைக்குத் தக்கவாறு யோகக்கலை அறிந்த ஆசான்களின் உதவியுடன் செய்துவந்தால் ஆரோக்கியம் பெறலாம். அத்துடன் உடலில் உள்ள சுரப்பிகளை சீராக இயங்கத் தூண்ட அவற்றுக்குரிய புள்ளிகளில் அழுத்தம் (அக்கியு பிரசர்) கொடுத்து வந்தால் மிக விரைவாகக் கட்டுப்படுத்த - குணமடைய வாய்ப்புண்டு.

• சித்தன்

**மே பக்கத் தொடர்ச்சி...**

தண்ணீரில் இருந்து உருவாக்கினார். தண்ணீர் திருமுழுக்கையும், புதுப்பிறப்பையும் எடுத்துக்காட்டுகிறது. திருமுழுக்கின் மூலம் புதுத் திருச்சபையை இயேசு உருவாக்கினார். அவரே திருச்சபையின் தலைவராகவும் விளங்கினார்.

எனவேதான் கானாவூர்த் திருமணம் தண்ணீரை இரசமாக மாற்றியது மாத்திரம் அல்ல, அதற்கு மேலாக திருச்சபையை உருவாக்கியதைக் காட்டுகிறது. அது மாத்திரம் அல்ல, திருச்சபை உருவாக்கப்பட்ட வேளையில் அங்கு மரியாளும் சீடர்களும் இருந்தார்கள்.

அப்படி மரியாள் திருச்சபையின் தொடக்கத்தில் இருந்தாள் என்றால், அவள் சரியான நேரத்தையும் காலத்தையும் புரிந்துகொண்டாள் என்றால், அவள் திருச்சபையில் முக்கியமான ஒருவளாக இருந்திருக்கின்றாள். அவளுடைய பரிந்துரை நிச்சயமாக இருந்திருக்கிறது. அப்படிப்பட்ட தேவ அன்னையை இன்று திருச்சபையில் தேவை இல்லை என்று சொல்ல முடியுமா?

திருச்சபையின் முதல் தூண்கள் மரியாள், சீடர்கள். அப்படிப்பட்டவர்களை நாம் வேண்டாம் என்று இலகுவாகத் தூக்கி எறிய முடியுமா? அப்படிச் சொல்வதற்கு நாம் யார்? ஆதியில் மரியாள் எப்படிப்பட்டவளாக, எந்தளவுக்கு இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறாள் என்று தெரியாதபடியினால்தான் சிலர் இன்று மரியாளை வேண்டாம் என்று சொல்கின்றார்கள்.

ஆனால் யோவான் நற்செய்தியின்படி கானாவூர்த் திருமணம் சொல்லுகின்ற பாடம், அன்னை மரியாள் திருச்சபையின் தொடக்கத்திலேயே இருந்தாள். அவளை வேண்டாம் என்று சொல்லுவதற்கு நமக்கு எந்த உரிமையும் இல்லை.

**மரியே வாழ்க...!**

• J. ஜெனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தை அளந்த புனிதன் (யோசேவ் வாஸ்)

குறுங்காவியம்



## 13 செண்பகக்குழல்வாய்மொழி

(வேறு)

### இடையே நிகழ்ந்த இரு அற்புதங்கள்

கண்டியின் எல்லைதாண்டிக்
கடுந்தவ முனிவன்மேற்கே
சென்றதும் திரும்பிவந்து
சேர்ந்ததும் புதுமையென்போம் - ஈழ
மண்டலம் அதனின்மேற்காம்
கொழும்பினை 'டச்சுக்காரர்'
ஆண்டதா லிதனைச்சொன்னேன்
அவர்நமக் கெதிரிதானே

எப்படிச் சென்றார்வந்தார்
இவரெனக் கேள்விகேட்டு
வைப்பதும் அதிற்சந்தோசம்
வளர்ப்பதும் நமக்குவேண்டா
எப்படி நடக்கவேண்டும்
எனஇறை உரைத்தஅந்த
சொற்படி நடந்ததெல்லாம்
சுவையுறு காதைதானே

கொழும்பெலாம் கத்தோலிக்கர்
கரந்துதான் வாழநேர்ந்தும்
பழுதிலா வேதங்காத்தார்
பட்டறி வாளர்போல்
விழிகளில் நெய்யைஊற்றி
விழித்தவர் வேதங்காக்கப்
பழுத்தநல் லாதி'மூப்பர்'
பக்கமாய்த் துணையிருந்தார்

இவர்களோ டிணைந்தளங்கள்
இனியநல் யோசப்வாசும்
இடுக்கெலாமூர்ந்து இயேசு
இனியநல் வார்த்தைகொண்டு
தவநிலை பிறழாச்சேவை
தன்னையே தலைமேற்தாங்கி
அவதியி லுழலும்கொழும்பார்
அவருக் குழைக்கலானார்

பகலிலே ஒடுக்கித்தன்னைப்
பகைவரும் அறியாவண்ணம்
இரவிலே உருவம்மாற்றி
இணைகுவார் பக்தரோடு
அகமெலாம் ஞானதாகம்
அதிகமாய்க் கொண்டோர்வந்து
இரவெலாம் விழித்திருந்து
அருந்திப்பின் அகன்றுசென்றார்

துணிந்தவர் ஒருநாள்'களனி'த்
துறையினைக் கடந்துமேற்காய்
பணிக்கென சென்றார்கரையில்
படைத்தள பதியின்சேனை
தனக்கினி முடிந்ததென்று
தபசியும் எண்ணுமுன்னே
அணியெனத் திரண்டோர்மேகம்
அதிர்வுடன் மொழியலாச்சு

இடியென விழுந்தநீரை
இதற்குமுன் கண்டிராத
படையது கண்டுஓடக்
கரையது துலங்கலாச்சு
நெடிதுயர் வானந்தந்த
நிம்மதிக் கீற்றினோடு
அடிதனை எடுத்துவைத்தார் - நீர்
ஒருதுளி உரசிடாது

இன்னொரு இரவுதன்னில்
இவரது வருகைதன்னை
முன்னறி படைகள்வீட்டை
முற்றுகை யிட்டவேளை
அந்நெடு படையைஅவரு
டுருவியே சென்றுஅப்பால்
தன்னிடம் வந்துசேர்ந்தார்
தனக்கது தெரியாவண்ணம்

முற்றுகை யிட்டுவீட்டை
முறையிலா 'டச்சு'வீரர்
அக்குவே றாணியாக்கி
அலசிட அங்கோர்மாது
வீற்றிருந் தவர்க்குமெல்ல
உணர்த்துவாள் விடைகளாலே
காற்றினைத் தவிரவேறு
கண்டன னில்லையென்று

விடையினைக் கேட்டுவிட்டு
விரைந்தஅவ் 'டச்சு'வீரர்
புயலென மீண்டும்வந்து
பார்த்தனர் மாதிருந்த
இடத்திலே தேவஅன்னை
இருந்தனள் சிலைவடிவாய்
அடைந்தனர் வியப்புமெய்தான்
அதற்குமுன் சிலையங்கில்லை

**- வளரும் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இதழ்த் தொடர்ச்சி...

# மூன்று கிறித்தவ தமிழ் இலக்கிய நூல்களின் நூலாராய்வு 11

திருமறைக் கல்லூரி ஆசிரியப் பணி கிறித்தவ மத சத்தியத்தைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பை இவருக்கு அளித்தது. இதனால் அந்த மத நெறிகளில் ஈடுபட்டதன் பேரால் இயேசு இரட்சகரால் தடுத்தாளப்பெற்றுக் கிறித்தவராக விழைந்தார். அதற்காகத் திருமுழுக்குப் பெற 1857ல் சென்னைக்கு வந்தார். ஆங்கு தினவர்த்தமானி என்ற இதழின் துணையாசிரியராகவும் மானில உயர்நிலை பள்ளித் துணையாசிரியராகவும் பணியாற்றினார். அக்காலத்தில் ஆங்கில தமிழ் அகராதியைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பீட்டர் பார்சிவல் ஐயரிடம் பணியாற்றினார். அப்போது ஐயர் அவர்களுக்குத் தமிழ் கற்பிக்கவும் அகராதி தொகுக்க உதவி புரியவும் வாய்ப்புக் கிடைத்தது. தான் சென்னைக்கு வந்த காரணம் நிறைவேறும் காலமும் வரவே 1858ம் வருடம் ஏப்பிரல் மாதம் 18ம் நாள் மயிலாப்பூர் தூய தாமசு திருச்சபையில் திருமுழுக்குப் பெற்றுக் கிறித்தவரானார். அப்போது அவருக்கு வயது முப்பது. அன்றிருந்து திருமுழுக்குப் பெயரான ஆல்பிரட் கிருட்ணபிள்ளை என அழைக்கப்பட்டார்.

அதன் பின்னர் பாளையங்கோட்டைக்குத் திரும்பி வந்து அங்கே வாழத் தொடங்கினார். ஏற்கனவே இவரது தம்பி முத்தையா கிறித்தவராக மதம் மாறியிருந்தார். அடுத்து இவரது குடும்பத்தினர் கிறித்தவர்களாக மாறினர். தான் பெற்ற கிறித்தவ இன்பத்தைப் பிறரும் பெறவேண்டுமென்ற பெரும் விழைவால் இரட்சணிய சரிதத்தை 1860ல் பாடத் தொடங்கினார். ஆனால் அது நிறைவு பெறவில்லை. 1864ல் சாயாபுரம் கல்விச்சாலையில் மீண்டும் ஆசிரியப் பணி செய்யத் தொடங்கி 1876ல் பாளையங் கோட்டைத் திருச்சபை திருத்தொண்டர் கழகக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரி யரானார். இக் காலத்தில் இலக்கியத்தை வளர்க்கும் பணியிலும் ஈடுபட்டு குற்றா லத்துக்கு அருகில் காப்பியத்



"மோட்ட சைக்கிளுக்கு செயின் வாங்கணும்"

"மோட்ட சைக்கிளுக்கெல்லாம் செயின் வாங்கிறிங்க எனக்கு ஒரு செயின் வாங்கித்த தரல்லயே..."

• மணி



## குறும்(புப்)பா - 49

பிறந்தநாள் பரிசாக ஆடை
அணிந்தவள் சென்றாளுப் போடை
கறந்தபால் நிறமது கடுகிவேன் பறந்தது
சிவந்தது ஆடைகண் கோடை

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டம் நிறுவினார். 1878ல் இரட்சணிய யாத்திரிகத்தைப் பாடத் தொடங்கினார்.

1886ல் திருவனந்தபுரம் மகராசர் கல்லூரியில் தலைமைப் பேராசிரியர் நியமனங் கிடைத்தது. இக்காலத்தில் சுந்தரம்பிள்ளை அவர்கள் அங்கு தத்துவப் பேராசிரியராக இருந்தார். அவரும் மனோன்மணியத்தை ஆங்கிருந்துதான் படைக்கத் தொடங்கினார். அதேபோல கிருட்ணபிள்ளை அவர்களும் இரட்சணிய யாத்திரிகப் படைப்பை ஆங்கிருந்தே வளர்த்து வந்தார். 1890ல் அந்தப் பதவியை விட்டு விலகி குலசேகரம் பட்டினத்திற்கு வந்து 1891ம் ஆண்டுவரை உப்பு விளைவிக்குந் தொழிலில் ஈடுபட்டார். அதில் எதிர்பார்த்த வருவாய் கிடையாததால் ஒரு வருடத்தின்பின்னர் வாழ்நாளின் இறுதிவரை கிறித்தவ இலக்கிய சங்கத்தில் ஆசிரியராகத் தொண்டாற்றி, 03.02.1900ல் கிறித்துவுக்குள் நித்தியரானார்.

இவர் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தில் வேதநாயகம் சாத்திரியார், வேதநாயகம்பிள்ளை, மீனாட்சி சுந்தரம்பிள்ளை, ராவ் பகதூர் சுந்தரம்பிள்ளை என்பவர்கள் வாழ்ந்தனர்.

### இவர் பதிப்பித்த நூல்கள்

01. வேதப் பொருள் அம்மானை
02. கால்டுவல் ஐயரின் பரத கண்ட புராதனம்

### தொகுத்த நூல்

01. காவிய தரும சங்கிரகம்


### படைத்த நூல்கள்

01. இலக்கண சூடாமணி 1883
02. நாம் கிறித்தவரான வரலாறு 1893
03. இரட்சணிய சமய நிர்ணயம் 1898

### செய்யுள் நடை

01. இரட்சணிய யாத்திரிகம் 1894
02. இரட்சணிய மனோகரம் 1899
03. போற்றித் திருவகவல் 1884
04. இரட்சணிய சரிதம் 1861

## "வத்திக்கான் வானொலியின் மின்காந்த அலைகளால் புற்றுநோய் பரவுவதாகக் கூறுவது உண்மையல்ல"



இத்தாலிய நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட மருத்துவ ஆய்வுக்குழு ஒன்று, வத்திக்கான் வானொலி ஒலிபரப்பின் மின்காந்த அலைகளுக்கும் புற்றுநோய்க்கும் தொடர்புள்ளது என அறிவித்ததைத் தொடர்ந்து இதற்கு மறுப்புத் தெரிவித்த வத்திக்கான் செய்தித் தொடர்பாளரும் வத்திக்கான் வானொலி உயர் இயக்குனருமான இயேசு சபைக் குரு ஃபெதரிக்கோ லொம்பார்தி கடந்த காலங்களில் நடத்தப்பட்டுள்ள அகில உலக அறிவியல் ஆய்வுகள், வானொலி மின்காந்த அலைகளுக்கும் புற்றுநோய்க்கும் தொடர்பில்லை என்பதைச் சுட்டிக் காட்டினார்.

பன்னாட்டு விதிகளுக்கு உட்பட்டே எப்போதும் செயல்படும் வத்திக்கான் வானொலி, 2001ம் ஆண்டு இத்தாலியுடன் ஏற்படுத்திய ஒப்பந்தத்தின்படி, அருகில் வாழும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தன் ஒலிபரப்பு முறைகளில் தீவிர கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்ததையும் அருட்தந்தை லொம்பார்தி நினைவுபடுத்தினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. இரட்சணிய குறள்

06. இரட்சணிய பாலபோதினி என்பன.

ஒரு இலக்கியப் படைப்பின் தரத்தை மதிப்பீடு செய்வதற்குப் பல வழிமுறைகள் கையாளப்படுகின்றன. அவற்றுள் இலக்கிய ஒப்பாய்வு, அந்த நூல் மக்களிடம் செறித்துள்ள அதன் உட்பொருள் ஆதிக்கம், அந்நூலின் பகுதிகளைப் பிற்கால இலக்கியப் படைப்பாளிகள் எடுத்தாண்ட ஆதாரங்கள் என்பனவும் சிலவாகும். இந்த ஆதாரப் பகுதியில் கிறித்தவக் கம்பன் கிருட்டினபிள்ளை அவர்களின் இரட்சணிய யாத்திரிகம் மக்களது மனதில் எவ்வாறு ஆழ ஊடுருவியுள்ளதென்பதையிட்டு ஆராய்வோம்.

இந்த ஆராய்வுக்குச் சான்றாக இவரது நூல்களின் மறுபதிப்புகள் பற்றிய ஒரு கணிப்பீட்டைக் கண்டுகொள்வோம். அதிலும் அவர் வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற முதல் பதிப்பு மீள்பதிப்புகள் என்றும் அவரது மறைவின் பின்னர் இடம்பெற்ற மீள்பதிப்புகள் எவை என்பதையும் முதலில் ஒட்டுமொத்தமாகக் கவனிப்போம். இவற்றுள் அவரின் மறைவுக்குப் பின்னரான மீள்பதிப்புகளும் மதிப்பாய்வுகளும் முக்கியமான இடத்தை வகிப்பன. காரணம்: அவை அவரது படைப்புகளை பிற்கால மக்கள் எவ்வாறு ஏற்றுக்கொண்டனர், அவற்றில் சொல்லப்பட்ட கருத்துகளை எவ்வாறு உள்வாங்கிக்கொண்டனர் என்பதை எடுத்துக் காட்டும் தெளிவான ஆதாரமாகின்றன.

தொடரும்...

# வீணை விறகானால்?



நீ வாசிப்பதற்காக நான்
வீணையாகிப் போகிறேன்
உனக்கு என்னென்ன வேண்டுமோ
வசதிகள் செய்து தருகிறேன்
என் உச்சி முதல்
உள்ளங்கால் வரையும் நீ
என்னில் சுரம் மீட்டலாம்
உன் தாகங்களையும்
தவிப்புகளையும்
என்னிலே தீர்த்துக்கொள்ளலாம்
ஆனாலும் ஒன்றைக் கேள்.......
இராத்திரிப் பொழுதுகளில் மட்டும்
வாசிக்கவும் நேசிக்கவும்
தெரிந்த நீ
பகற் பொழுதுகள் ஒவ்வொன்றிலும்
அடுப்படியில் கிடக்கும்
விறகுகளாக நோக்காதே - ஓ
உனக்கு நான் விடுக்கும்
இறுதி எச்சரிக்கை இது
இதனையும் மீறி நீ
பகற்பொழுதுகளில் என்னை
விறகாகக் கணக்கிட்டால்
உன்னைத்தான் உலகம் இனி
விறகாக மதிப்பிடும் என்பதனை
இனியொரு பொழுதும்
மறந்துவிடாதே



கனடாவிலிருந்து.....
கலாநிதி ஈழத்துப் பூராடனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இம்முறை தொண்டனுக்காக வித்தியாசமான ஒருவரைச் சந்தித்தோம். மட்டக்களப்பு பொதுச்சந்தையில் மரக்கறிகள் விற்கும் பகுதியில் மரவள்ளிக் கிழங்கு விற்கும் வியாபாரிகளில் இருவர் ஒரே அச்சில் வார்த்ததுபோல் இருப்பர். அவர்கள் இருவரும் இரட்டையர்கள் என்று எண்ணினோம். நீண்டகாலமாக இவ்வாறான எண்ணம் எம் மனதில் இருந்தது. ஒருமுறை மக்கள் வங்கியில் அவர்களில் ஒருவர் "ஓய்வூதியப் பணம்" பெறுவதைக் கண்டு ஆச்சரியப்பட்டோம். "அட! கிழங்கு விற்பவர் எப்படிப் 'பென்சன்' பெறுகிறார்!" என்று ஆச்சரியப்பட்டவாறு அவரை அணுகி விசாரித்தபோதுதான் 'தான் ஓய்வுபெற்ற ரயில்வே எஞ்சின் உபசாரதி' என்று கூறியபோது மீண்டும் ஆச்சரியப்பட்டோம். அன்றிலிருந்து அவரை எப்படியாவது தொண்டனின் சில நிமிடங்களுக்குள் உள்ளீர்க்க வேண்டும் என்று முடிவு கட்டிக்கொண்டோம்.

அண்மையில் அவரைச் சந்தையில் கண்டு எம் எண்ணத்தைச் சொன்னோம். நோன்புக்காலம் என்றாலும் புன்முறுவலுடன் நண்பகல் 12.00 மணிக்கு நேரம் ஒதுக்கித் தந்தார். அந்த மதியநேரத்தில் அவரை மீண்டும் சந்தித்தோம்.

**உங்கள் பெயரைச் சொல்வீர்களா?**

❊ எனது பெயர் ஐ.ரசூல்.

**உங்களுக்கு யாரேனும் இரட்டைச் சகோதரர்கள் உள்ளனரா?**

❊ இல்லை, உடன் பிறந்த தம்பியொருவர் இச்சந்தையில் கிழங்கு வியாபாரியாக உள்ளார்.

**உங்கள் சொந்த ஊர் காத்தான்குடியா?**

❊ இல்லையில்லை. எனது சொந்தஇடம் மட்டக்களப்பு கோட்டைமுனை.

**உங்கள் இளம்பராயம் பற்றிச் சொல்லுங்களேன்.**

❊ நான், 1945ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி பிறந்தேன். எனது தகப்பனார் அக்காலத்தில் பிரபல்யமான கிழங்கு வியாபாரி. நான் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் க.பொ.த (சா.த) வரை கற்றேன். அது இப்போது இந்துக் கல்லூரி என்று அழைக்கப்படுகிறது. நான் விஞ்ஞானப் பிரிவில் கற்றேன். அக்காலத்தில் க.பொ.த (சா.த) வகுப்பிலேயே விஞ்ஞானம், கலை, வர்த்தகம், என்றவாறு பிரிவுகள் காணப்பட்டன. அதன்பின்னர் 'தொழில்' அலுவலகத்தில் எனது பெயரைப் பதிவுசெய்து கொண்டேன். ஒவ்வொரு முறை பதியும் போதும் ஒரு 'ஸ்டாம்ப்' அடிப்பார்கள். இவ்வாறு ஆறு 'ஸ்டாம்ப்' அடித்த பின்னர் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தார்கள். அதனைத் தொடர்ந்து 1968ம் ஆண்டு 'இலங்கை ரயில்வே'யில் சாதாரண லேபராக இணைந்துகொண்டேன். அது அமைய அடிப்படையிலான நியமனம். அனுராதபுரத்தில்தான் முதல் நியமனம். பின்னர் 1971ம் ஆண்டு நிரந்தர நியமனம் கிடைத்தது. பல்வேறு பதவியுயர்வுகளின் பின்னர் ஓய்வுபெறும்வரை 'ரயில்வே எஞ்சின் உதவியாளராகப்' பணியாற்றினேன்.

**உங்களின் சேவைக்காலத்தின் கணிசமான பகுதியில் நீராவி இயந்திரத்தில்தான் பணியாற்றியிருப்பீர்கள். எமது ஆர்வமான வாசகர்களுக்காக அதுபற்றிச் சற்றுச் சொல்வீர்களா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ ஆம்! உண்மையிலேயே வித்தியாசமான அனுபவங்கள்தான். 'டீசல் இயந்திரம்' என்றால் சாரதிக்கு ஒரு உதவியாளர்தான் இருப்பார். ஆனால் 'நீராவி இயந்திரத்திற்கு' இரண்டு உதவியாளர்கள் இருப்பர். அதற்கு நிலக்கரி பாவிப்போம். அதை அள்ளியள்ளி நெருப்பில் போடவேண்டும். மிகவும் கடினமான வேலை.

**அப்படியானால் நீராவி இயந்திர வெப்பநிலை எவ்வாறு பேணப்படுகிறது?**

❋ வெப்பநிலையானது சுமார் 145 பாகை பரனைட்டில் பேணப்படல்வேண்டும். வெப்பநிலையைக் காட்டும் கருவியின் வாசிப்புக்கு ஏற்றமாதிரி நிலக்கரியைப் போடவேண்டும். வெப்பநிலை சற்றுக் கூடிவிட்டால் அது ஆபத்து. உடனே தன்னியக்கமாக நீராவியானது வேறு வழியாக வெளியேறி வெப்பத்தைக் குறைத்துவிடும். என்றாலும் அதன் மூலம் தாங்கியின் நீர் மட்டம் குறைந்துவிடும். எனவே வெப்பம் தொடர்பாக அவதானமாக இருப்போம்.

**நீராவி இயந்திரங்களில் சில பகுதிகள் திறந்தவாறுதான் காணப்படும். மழை பெய்யும் நேரங்களில் நெருப்புத் தணல் அணைந்துவிடாதா?**

❋ நெருப்புத் தணலானது நிலக்கரியின் தணல். நிலக்கரியில் இயற்கையாகவே மசகு எண்ணெய் காணப்படும். அத்துடன் இரும்புத்தாதும் காணப்படும். எனவே தணலை எந்தப்பெரிய மழையாலும் அணைக்க முடியாது. மழைத்துளிகள் விழ விழ ஆவியாகிவிடும்.

இன்னொரு விடயமும் இதில் குறிப்பிடப்படவேண்டும். வெப்பம் அதிகமாகிவிட்டால் இயந்திரத்திற்கும் ஆபத்து. இயந்திரமும் இரும்பல்லவா? அந்த நேரத்தில் நெருப்புக்கு மேலே உள்ள நீர் தாங்கியிருக்கும் பகுதியில் உள்ள ஈயப்பகுதி உருகிவிடும். உடனே தண்ணீரெல்லாம் நெருப்பு, தணல் என்பவற்றின்மேல் ஊற்றுப்பட நெருப்பு அப்படியே அணைந்துவிடும். இதில் இரண்டு பிரச்சினைகள் உள்ளன. ஒன்று: அப்படி அணைந்தால் நீராவி எஞ்சினை 'ரன்னிங் செட்'டுக்குக் கொண்டு சென்றுதான் மீண்டும் தீ மூட்ட முடியும். இரண்டு: பொறுப்பான எஞ்சின் உதவியாளருக்கும் தண்டப்பணம் விதிக்கப்படும்.

**நீராவி இயந்திரங்களின் இழுவைச் சக்தி எப்படி?**

❋ அபாரமானது! மட்டக்களப்பில் இருந்து பதினொரு பயணிகள் பெட்டிகளை இழுத்துச் செல்வோம். பின்னர் கல்லோயாவில் வைத்து திருகோணமலையில் இருந்து வரும் ஆறு பெட்டிகளையும் இணைத்து மொத்தமாக பதினேழு பெட்டிகளை இழுத்துச் செல்வோம்.

நீராவி இயந்திரங்களில் நெருப்பு காணப்படுவதால் ஏற்படும் அபாயங்களைத் தவிர்ப்பதற்காகத்தான் புகையிரதப்பாதைகள் காட்டுப் பகுதியினூடாக, மக்கள் குடியிருப்புகளைத் தவிர்த்து அமைக்கப்பட்டன. என்றாலும் தற்காலத்தில் குடியிருப்புகள் புகையிரதப் பாதைகளை அண்மித்துவிட்டன. இதனால் விபத்துகளும் அதிகரிக்க வாய்ப்பாகிவிட்டது.

நாங்கள் பணியாற்றியபோது ரயில் சரியான நேர அட்டவணைப்படிதான் ஓடும். பிந்தும் ஒவ்வொரு நிமிடத்திற்கும் காரணம் காட்டவேண்டும். இல்லாவிட்டால் ஒழுங்கு நடவடிக்கைதான்.

**உங்கள் பணிக்கால அனுபவங்கள் பற்றி...**

❋ கஷ்டப்பட்டு வேலை செய்தேன் பதவியுயர்வுகள் கிடைத்தன. சிக்கன வாழ்வு; கடனில்லை, அதேபோல் சேமிப்பும் இல்லை. 1994ம் ஆண்டு விசேட ஓய்வுத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றேன்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் டீசல் எஞ்சின் சாரதி உதவியாளராக இருந்தபோது ஓட்டமாவடிப் பகுதியில் வங்கி முகாமையாளர் ஒருவரும் அவரின் மகனும் வீதிக்கடவையில் விபத்துக்குள்ளாகி மரணமடைந்தனர். ரயில் கடவைகளில் பாதசாரிகள், வாகனம் செலுத்துவோர் அவதானமாகச் செல்லவேண்டும். ரயிலை சடாரென நிறுத்த முடியாது. தனியே எஞ்சின் என்றால் எஞ்சின் பிரேக்கைப் பயன்படுத்தலாம். பெட்டிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுவிவிட்டால் எஞ்சின் மற்றும் பெட்டிகள் எல்லாவற்றினதும் பிரேக்குகளும் இயங்கித்தான் ரயில் நிற்கும்.

இதேபோன்றுதான் தனி எஞ்சின் என்றால் சாரதிதான் அதற்குப் பொறுப்பு. பெட்டி கொழுவி விட்டால் எஞ்சின் மற்றும் எல்லாப் பெட்டிகளுக்கும் 'ரயில்வே கார்ட்'தான் பொறுப்பு.

**அதுசரி! ஏன் ஓய்வின் பின் கிழங்கு வியாபாரத்தில் இறங்கினீர்கள்?**

❊ எனது தகப்பனாரின் தொழில் அது. நான் படிக்கும்போது பின்னேரவேளைகளில் அவருக்கு உதவுவதுண்டு. எனவே புதிய தொழில் செய்ய ஆரம்பித்தேன். இரண்டு மகள்மாருக்கும் அதன் மூலந்தான் இரண்டு வீடுகள் கட்டித் திருமணம் செய்து கொடுத்தேன். நான், மனைவி, மகன் இருக்க மூன்றாவது வீடும் கட்டினேன். பென்சனை அப்படியே சீட்டுப் பிடிக்கின்றேன்.

**நீங்கள் வாசகர்களுக்குச் சொல்ல விரும்புவது என்ன?**

❊ தொழிலில் பக்தியாக, அவதானமாக இருங்கள். ரயில் ஓடும்போது தண்டவாளம் கழன்றுள்ளதா, யானை நிற்கின்றதா என்றெல்லாம் பார்ப்பதுபோல் தொழிலில் எப்போதும் நேர்மையாக இருக்கவேண்டும். நாணயம், நம்பிக்கை, நன்னடத்தை இருந்தால் வாழ்வில் முன்னேறலாம்.

*நாம் அவருக்கு நன்றிகூறி விடை பெற்றோம்.*

- ஆழியோன் -



# "சமயச் சுதந்திரமே உலக அமைதிக்கான வழி"
# உலக அமைதி நாளுக்கான திருத்தந்தையின் செய்தி

மக்கள் அவரவர் சமயங்களைப் பின்பற்றச் சுதந்திரம் அளிப்பதே உலக அமைதிக்கு வழிவகுக்கும் என்று திருத்தந்தை கூறியுள்ளார்.

1968ம் ஆண்டிலிருந்து புத்தாண்டு நாளான ஜனவரி முதல் நாள் உலக அமைதி நாளாகக் கொண்டாடப்படுகிறது. வருகிற 2011ம் ஆண்டின் உலக அமைதி நாளுக்கான கருத்தைத் தேர்ந்தெடுத்து வெளியிட்டுள்ளார் திருத்தந்தை.

தனிநபரின் மனித மாண்பை நிலைநாட்டுவதில் மனித உரிமைகள் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றதென்றும் மனிதகுலத்தின் மற்றெல்லா விடுதலைகளிலும் சமய விடுதலையே தலையாய விடுதலை என்றும் திருத்தந்தையின் இம்மையக்கருத்து சுட்டிக் காட்டுகிறது.

அனைத்து மனிதரும் உண்மையைத் தேடி வருகின்றனர் என்றும் இந்த உண்மையைக் காணத் தேவையான சமயச் சுதந்திரம் ஒவ்வொரு நாட்டிலும் வழங்கப்படவேண்டும் என்றும் திருத்தந்தை தன் ஆவலை இதன் மூலம் வெளியிட்டுள்ளார்.

உண்மையின் பல பரிமாணங்களை வெளிப்படுத்தும் வகையில் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் 2006ம் ஆண்டிலிருந்து உலக அமைதி நாளுக்கென பொருத்தமான கருத்துகளை வழங்கி வருகிறார் என்று செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிறிஸ்தவ நாகரீகம் பற்றிய பொது அறிமுகம்

சமயநெறிகளைப் புறந்தள்ளிவிட்டு ஒழுக்க விழுமியங்கள் நிறைந்ததொரு சமூகத்தை எந்த விதத்திலும் உருவாக்க முடியாது. இதனாலேயே சமய விளக்கம் மிகவும் அத்தியாவசியமானதொன்றாக உள்ளது. இத்தகைய சமய விளக்கத்துடனான வாழ்வானது மிகவும் பெறுமதி வாய்ந்தது. இதன் இயல்பாகவே ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த சமூக மொன்று உருவாகும்.

கலைத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் இதுவரை காலமும் நோக்கங்களின் அடிப்படையில் கட்டியெழுப் பப்பட்ட கலைத்திட்டமானது அத்தத்துவத்தைக் கடந்து தேர்ச்சி அடிப்படையிலான கலைத்திட்டத் தத்துவத்துடன் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதற் கிணங்க ஒரு கிறிஸ்தவன் தனது சமயத்தின் வழியாக எத்தகைய சமயத் தேர்ச்சிகளை தனது வாழ்க்கையுடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதைச் சரியாக இனங்கண்டு கொள்ளக்கூடிய தாய் இருக்கிறது. அத்தேர்ச்சிகளின் விருத்தியுடன் தொடர்புபடுத்திக்கொள்ளக்கூடிய விதம் கவனத்திற் குரியதொன்றாகும். இத்தகைய கற்பித்தலை மேற் கொள்ளப் பொருத்தமான வகுப்பறைச் செயற்பாட்டை மேற்கொள்ளும் நோக்குடன் இலங்கை தேசிய கல்வி நிறுவகம் முன்வைத்திருக்கும் கலைப்பீடப் பாடத் திட்டத்தின் மறுசீரமைப்பின் கீழ் 2009ல் அறிமுகஞ் செய்த க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் "கிறிஸ்தவ நாகரீகம்" எனும் பாடத்தை அறிமுகஞ் செய்துள்ளது.

இதனால் மாணவர்கள் கிறிஸ்தவ பாடத்தின் மூலம் பல்கலைக்கழகம் செல்லும் வீதத் திலும் பார்க்க Z புள்ளி அடிப்படையில் கிறிஸ்தவ நாகரீகத்தின் மூலம் அதிகமானோர் பல்கலைக் கழகம் செல்ல வழி சமைக்கிறது. எனவே, மாண வரின் நலம் கருதிய இந்நாகரீகமானது கிறிஸ்தவக் கோட்பாடுகள், வரலாறுகள், இலக்கியங்கள், இறையியல், மெய்யியல், கலை எனப் பல்துறைகளையும் தன்ன கத்தே உள்ளடக்கியிருப்பதனைக் காண முடிகிறது.

இக்கிறிஸ்தவ நாகரீகத்தின் நோக்கங்களை விரிவாக நோக்குகையில், கிறிஸ்தவ மறையின் ஆரம்ப வரலாறு மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ் தவம் பரவியதற்கான காரணங்கள்: துறவற வாழ்வு, துறவற சபைகளின் ஆரம்பங்கள், மத்தியகாலத் திருச் சபையில் சீர்திருத்தங்கள் ஏற்படுவதற்கான கார ணங்கள், புரட்டஸ்தாந்து கொள்கையின் ஆரம்பம், கீழைத்தேய நாடுகளில் கிறிஸ்தவ நாகரீகம் பரவிய விதம் பற்றிய விளக்கம், பண்பாடு, சமூக முன்னேற்றம், 2ம் வத்திக்கான் சங்கப் படிப்பினைகள், திட்டமிடல்கள், நாகரிகத்தில் பண்பாட்டுத்தன்மை, கிறிஸ்தவ நாகரீகத்தின் அடிப்படையில் ஏனைய நாகரீகத்தின் வளர்ச்சி பற்றிய விளக்கம், கிறிஸ்தவ சபையின் ஆரம்பம், தொடக்க காலத் திருச்சபையின் சமூக பண்பாட்டுக் கலாசார விழுமியங்கள், புதிய ஐரோப்பிய கலாசாரத்தைக் கட்டியெழுப்ப துறவற சபைகளின் பங்களிப்புகள், கிறிஸ்தவ கலாசாரத்தை ஆரம்பிப்பதற்கு வழி பாட்டின் பங்களிப்பும் அதற்கான சுதேச வழி பாட்டை உருவாக்கத் தேவையான வழிமுறைகளும், கல்விப் பணி முன்னேற்றத்திற்குத் திருச்சபை வழங்கிய ஒத்துழைப்பு, கிறிஸ்தவ நாகரீகம் உருவாகியதால் சமுதாய கலாசாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களின் அமைப்பு, ஆரம்பகால கீழைத்தேய - மேலைத்தேய திருச்சபையில் விளங்கிய கலாசாரப் பண்புகள், புதிய சிந்தனைக்கு வழிவகுத்த கிறிஸ்தவ சிந்தனை யாளர்கள், சிற்பக் கலைகளின் மேம்பாட்டிற்காக திருச்சபையின் பங்களிப்பு எனப் பல்வகை அம்சங் களையும் சுவாரசியமான முறையிலும் மாணவர் களுக்குப் பலன் தரக் கூடிய விதத்திலும் அத்துடன் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்தலும் அதனூடாக அவர்களின் ஆளுமையை விருத்தி செய்தலும் இக்கிறிஸ்தவ நாகரீகத்தினூடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்னன் பெற்ற நலன்

பேடினன் என்ற உரோமாபுரி மன்னன் இயேசுவின் திருப்பாடுகளின் பெயரில் மிகுந்த பக்தியுள்ளவராயிருந்தான். அனுதினமும் இரவு நித்திரை செய்யுமுன் தம் படுக்கைக்கருகில் வைக்கப்பட்டுள்ள பாடுபட்ட சுருபத்தின் முன் முழந்தாள் படியிட்டுச் சற்று நேரம் செபித்தபின் திருக்காயங்களை முத்தி செய்துவிட்டு நித்திரை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருநாள் இரவு இவ்வாறு செய்தபின் முத்தி செய்யப் போகையிலே, இயேசுவின் உருவமானது தன் கால்களை மடக்கிக்கொண்டு அவரைக் கொஞ்சவிடாமல் தடுத்தது. மன்னன் மிகவும் அச்சமுற்றார். தான் ஏதாவதொரு சாவான பாவத்தைக் கட்டிக்கொண்டபடியாலேதான் திருச்சிலுவையை முத்தஞ் செய்ய விடாமல் இறைவன் தடுக்கிறார் என்று சிந்தித்துத் துன்பப் பட்டார். தமது அரண்மனைக் குருவானவரை அழைத்து நிகழ்ந்தவற்றைக் கூறினார். அவரோ அனைத்தையும் கவனமாகக் கேட்டுவிட்டு மன்னரை மீண்டும் சிலுவையை முத்தமிடுமாறு கூறினார். மன்னர் முத்தி செய்யப்போகையில் இயேசு மீண்டும் தம் கால்களை மடக்கித் தடுத்ததைக் கண்டார். குருவானவர் சிலுவையின் அருகே சென்று உற்றுப் பார்த்து ஆராய்ந்தார். அதன்மீது ஏதோ பூசப்பட்டிருப்பதைக் கண்டார். அது பளபளப்பாயிருந்தது. சந்தேகங் கொண்ட குருவானவர் ரொட்டித் துண்டொன்றை எடுத்து அதைத் துடைத்து ஒரு நாய்க்குப் போட்டார். நாய் அதையுண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் இறந்துவிட்டது. அது விஷமென்பதையறிந்து இயேசு தம் வல்லமையால் தம்மைக் காத்ததை நினைத்து அவர் கிருபைக்காக நன்றி கூறிய மன்னனுக்கு இயேசுவின் திருப்பாடுகளின் மீது கொண்ட பக்தி அதிகமானது.




இவ்வேளையிலே இந்தப் புதுமையைக் கண்ட பணியாள் ஒருவன் மன்னன் காலில் விழுந்து அழுதான். "அரசே! நீர் ஒவ்வொரு இரவும் பாடுபட்ட சுருபத்தின் காயங்களை முத்தி செய்கிற வழக்கத்தையறிந்து கொண்ட உம் பகைவர் விஷத்தால் உம்மைக் கொல்ல எனக்குக் கைக்கூலி கொடுத்து, திருக்காயங்களின் மீது விஷத்தைத் தடவி விடச் சொன்னார்கள். நான் அப்படியே செய்தேன். அந்த விஷம் உதட்டிலே பட்டாலே போதும் அது வாய் மூலம் செல்லுமுன்னே இறந்துவிடுவர். பணத்துக்கு ஆசைப்பட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "செபிப்பவர் எவரும் தனிமையில் இல்லை" திருத்தந்தை



செபிப்பவர் எவரும் ஒருபோதும் தனியாக இல்லை. ஏனெனில் செபிப்பவரின் குரல் திருச்சபையின் குரலோடு பின்னிப் பிணைந்துள்ளது என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ற் கூறினார். இயேசு சொல்லிக்கொடுத்த செபம் மனிதனின் பொருளாதார மற்றும் ஆன்மீகத் தேவைகளை எவ்வாறு ஒன்றிணைத்து வெளிப்படுத்துகின்றது என்பது குறித்து விளக்கிய திருத்தந்தை, இது ஒருவரின் சொந்தத் தேவைகளை நிறைவேற்றுமாறு கேட்பதல்ல, மாறாக ஒருவர் கடவுளுடனான நட்புறவில் தொடர்ந்து வாழ்வதற்கு உதவி கேட்பதாகும் என்று கூறினார் திருத்தந்தை.

செய்துவிட்டேன். ஆண்டவர் இயேசுவின் பாடுபட்ட சுருபத்தைப் பார்த்துத் தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும்" என்று மன்றாடினான். அதைச் செவியுற்ற மன்னன் "ஆண்டவரின் நாமத்திலே நான் உன்னை மன்னிக்கிறேன். இயேசு உன்னை மன்னிக்க அவரிடம் வேண்டிக்கொள்" எனக் கூறியதுடன் தம்மைக் காத்த இறைமகனுக்கு நன்றி ஆராதனையையும் புரிந்தார்.

இதையறியும் நமக்கு இயேசு தம் திருக்காயங்களை நாம் முத்தி செய்வதைக் குறித்து எவ்வளவு ஆசையாகவுள்ளார், அதைச் செய்யும் எம்மீதும் எத்தனை அக்கறையாய் இருக்கிறார் என்பதையறிந்து கொள்வோம். நாமும் அவரது திருப்பாடுகள் மீதும் பாடுபட்ட சுருபத்தின்மீதும் பக்திகொண்டு அடிக்கடி தியானித்து, முத்தி செய்வதன் மூலமாக அளப்பரிய பலன்களை அடைவோம்.

**"சிலுவையைப் பற்றிய போதனை அழிவுறுபவர்களுக்கு மடமையே, மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை"**

(1 கொரி: 1:18)

**• மற்றில்டா**

**நன்றி: வெள்ளிக்கிழமை ஆராதனை**

## வாசகர் எண்ணங்கள்.....

- தொண்டனை 32 பக்கங்களாக்கி விலை ரூபா 30 வைப்பது பற்றி முன்பே எழுதியுள்ளேன்.
- நேர்காணல் ஒவ்வொரு முறையும் சிறப்பாக அமைகிறது.
- இம்முறை ஓசானம் பற்றிய நேர்காணல் சிறப்பு. (நேர்காணல் முடிவில் அவர்களது முகவரி மற்றும் தொலைபேசி எண் குறிப்பிட்டால் நல்லது. அவர்களைத் தொடர்புகொண்டு வாழ்த்துகளைத் தெரிவிக்க முடியும்)
- ஆசிரியத் தலையங்கம் இம்முறையும் துணிச்சலாகவே எழுதப்பட்டுள்ளது. (ஏனையோர் தொடாத விடயம்)
- வாகரைவாணன் சிறுகதை, அவருடைய தந்தையின் கதைதானே... சொந்தப் பெயரையே குறிப்பிட்டுள்ளார். நல்ல சிறுகதை.

**அன்புமணி, ஆரையம்பதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம்

ஜீவரத்தினம் கென்னடி

எனக்கு அந்த விபரீத ஆசை வந்திருக்கக் கூடாது தான்! அதுவும் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர்! முதல் நாள் இரவு எனது மகன் மூன்று வயது- எனது பள்ளிக்கூட நாட்களையும் எனது ஆசிரியர்களையும் பற்றிக் கேட்ட போது என்னையே அறியாது எனக்குள்ளேயே உள்மனதில் கிடந்த ஆசை அன்று அதிகாலை திடீரென விழிப்பு வந்ததும் வெளிவந்து விட்டது. இதற்கு முன்னரும் பல தடவைகள் எனது மகனைத் தூங்க வைக்க எத்தனையோ எனது இளமைக்கால நிகழ்வுகளைக் கூறியுள்ளேன். ஆனால் இது எனக்குப் புது அனுபவம்.

எனது மூன்றாம் வகுப்பில் எனக்குத் தமிழ் கற்றுக்கொடுத்தவர் கோபாலசிங்கம் ஐயா, செய்யுளும் உரைநடையுமாக மிக மிக அழகாகக் கற்றுத்தருவதிலும் அதை எங்களுக்கு வாழ்க்கையுடன் சேர்த்து விளக்குவதிலும் மிகவும் கெட்டிக்காரர். ஏனோ எனக்குக் கோபாலசிங்கம் அய்யாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. நான் அவரது பிரியமான மாணவர்களில் ஒருவனல்ல. ஏதோ சராசரியாகப் படிப்பவன் தான், ஆனால் எனது அப்புச்சியின் கீழ் கோபாலசிங்கம் ஐயா படிப்பித்ததாக அவரும் எனது அப்பாவும் அடிக்கடி கூறிவந்ததன் காரணமாக எனக்குச் சிறு வயதிலே ஓர் ஈர்ப்பு இருந்தது. அப்போது நானும் எனது குடும்பமும் அக்கிராமத்திலே வசித்து வந்தோம். பின்னர் நகருக்குப் படிப்புக்காக மாறியதும், மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றதும் தனிக்கதை.

இன்று ஏனோ என்னுள் எழுந்த ஆசையைச் செயல் வடிவமாக்க நினைத்தேன். இருபத்தைந்து ஆண்டுகளின் பின்னர் கோபாலசிங்கம் அய்யா எப்படி இருப்பார், என்னைக் கண்டிருப்பாரா, இரண்டு வருடங்கள் மட்டுமே அவரிடம் படித்த என்னை எவ்வாறு வரவேற்பார், எனது வருகை அவருக்கு மகிழ்ச்சியாக இருக்குமா என அடுக்கடுக்கான கேள்விகளுடன் மனைவியிடம் கூறிவிட்டு அன்றிரவு நாங்களிருந்த கிராமத்திற்குப் புறப்பட்டு விட்டேன்.

காலையில் புகையிரதத்திலிருந்து இறங்கியதுமே அவ்வூர் இப்போது கிராமமில்லை நகரமாக மறிவிட்டது என்பது ஒருபக்கம் மகிழ்ச்சியாகவும், மறுபக்கம் துன்பமாகவும் இருந்தது! காரணம் இந்தப் புது நகர்ச்சாயலில் எப்படி அவரின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பது என்ற கவலையை விட, நான் சிறு வயதில் ஓடியாடித் திரிந்த இடம் இவ்வாறு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவிட்டதே என்ற கவலை தான் கூடுதலாக இருந்தது. காலையுணவை உண்டபின் அவரிருந்த தெருப்பக்கம் செல்லலாம் என நினைத்து ஒருவாறு அந்தத் தெருவுக்கு வந்துவிட்டேன். நல்லவேளை அந்தத் தெருப்பெயர் இன்னமும் மாற்றப்படாமலே இருந்தது. ஆனால் தெருவின் வடிவமோ முற்றிலும் மாறிவிட்டது. நெருக்கமாக நிறைய வீடுகளும், அதை விட மிக நெருக்கமாக நிறையக் கடைகளும், புதிய மனிதர்களுமாகவே இருந்தது. இது நகருக்கு ஒரு முன்னடைவா அல்லது என் எண்ணத்திற்கு ஒரு பின்னடைவா எனத் தெரியவில்லை.

ஏதோ நடந்து ஒரு கடையைத் தேடிப்பிடித்தேன். தேடிப்பிடித்ததன் காரணம் நான் தேடும் கோபாலசிங்கம் ஐயாவினைத் தெரிந்தவராக இருக்க வேண்டுமே என்ற நோக்கந்தான். அதனால் இருப்பதிலேயே ஆகக் கூடிய வயதான கடைக்காரரிடம் சென்றால் அவருக்கு நிச்சயம் தெரிந்திருக்கும் என்ற நப்பாசையே! ஆளில்லாத ஒரு கடையையும் கண்டு பிடித்து விட்டேன், அதுவும் சுமார் ஒரு ஐம்பதிலிருந்து ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க கடைக்காரர் அங்கே இருந்தார்.

"அண்ணன்! உங்களுக்கு கோபாலசிங்கம் மாஸ்டர் வீடு தெரியுமா?" என்றதும்

"எந்தக் கோபாலசிங்கம்?" எதிர்க் கேள்வி கேட்டார்.

"தமிழ்ப் பாடம் படிப்பித்தவர், தமிழ்க் கலவன் பள்ளியில வேலை பார்த்தவர்" என்று சொன்னதும் அவருக்கு விளங்கவில்லை.

வந்திருந்த ஒரு வாடிக்கையாளருக்கு சீனியும் மாவும் கொடுத்துவிட்டு அவரிடம் கடைக்காரர் கேட்டார் "தம்பி டினேஸ், உனக்கு யாரோ கோபாலசிங்கம் மாஸ்டரத் தெரியுமா?" எனவும், அவனோ "யாரு பிசிக்ஸ் படிப்பிக்கிற கோபாலசிங்கமா?" என்றான்.

நானோ "இல்ல தம்பி, தமிழ் படிப்பித்தவர்" என்றதும் "எனக்கு அப்பிடியொருவரைத் தெரியாதே" என்றவன் பறந்து விட்டான்.

கடைக்காரரோ எப்படியாவது எனக்குக் கோபாலசிங்கம் அய்யாவைக் கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டும் என முடிவுகட்டிக்கொண்டார் போல இருந்தது.

"எந்த ஸ்கூல்ல படிப்பிச்சவர்?" என்றதும் "தமிழ்க் கலவன் பாடசாலையில" என்றேன்.

"அப்படி ஒரு பள்ளியும் இந்த ஊரில இல்லையே!" எனக்கே சந்தேகமாகி விட்டது. நான் பிறந்த, வசித்த, படித்த ஊரா அல்லது வேறோரூரா!...

"இல்ல அண்ணன்! இந்த ஊருல தான்" என்றதும் சைக்கிளில் சென்ற ஒருவரைக் கைதட்டி "தம்பி மணிவண்ணன், இங்க வாவன்" எனக் கூப்பிட்டு

"அங்க எங்கடா தம்பி தமிழ்க் கலவன் பள்ளி இருக்குது? ஐயா ஆரோ கோபாலசிங்கம் வாத்தியாரப் பாக்கோணுமாம்" என மேலதிகத் தகவலையும் தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவண்ணனும் என்னையும் எனது தோற்றத்தையும் பார்த்துவிட்டு, தலையைத் தடவினான். பின்னர் கடைக்காரரிடம் "குமாரசாமி அண்ணன்! அந்தப் பள்ளிட பேர மாத்தியாச்சி. இப்ப அது இந்துக் கல்லூரி" என்ற தகவலை மட்டும் சொன்னான்.

மொழியிலிருந்து, இனத்திலிருந்து, நாம் இப்போது மதத்தினுள் தீவிரமாக நுழைந்து அதிலும் வேருன்றி விட்டோம் என்பது மட்டும் விளங்கியது. மணிவண்ணன் போன பின்னர் கடைக்காரர் கோபாலசிங்கம் ஐயாவைப் பற்றி மேலதிகத் தகவல் உண்டா எனக் கேட்டார். "ஓ... அவர் ஒரு நல்ல எழுத்தாளர், கனக்க விசயமெல்லாம் எழுதியிருக்கார். சைவ சமயத்தப் பற்றி கனக்க எழுதியிருக்கார்" என்றேன் ஓரளவு நம்பிக்கையுடன்.

புது விடயத்தால் மேலும் குழம்பிப்போன கடைக்காரர் குமாரசாமி அண்ணன், அந்த வழியில் சென்ற வேறொரு பெண்ணைக் கூப்பிட்டார். அனேகமாக அப்பெண் எனது வயதொத்திருப்பாள் எனத்தோன்றியது. அதுவும் திருநீறிட்டுக், கோயிலிலிருந்து வருவது போன்ற தோற்றமிருந்தது.

"தங்கச்சி சியாமளா, உனக்கு சைவ சமயத்தில புத்தகம் எழுதிற கோபாலசிங்கம் வாத்தியாரைத் தெரியுமா புள்ள?"

"இல்லையே அண்ணே. வேற என்ன செய்தவர்?" எனக் கேட்கவும் "அவர் ரிட்டயட் தமிழ் வாத்தியாராம்" என்றதும் சியாமளாவோ "தமிழே? என்னோட படிப்பிக்கிற கோபாலசிங்கம் மாஸ்டரத்தான் தெரியும் அவரும் சயன்ஸ் தான் படிப்பிக்கிறவர்" என ஏதோ ஒருவித நாணத்துடன் கூறிவிட்டு என்னையும் ஏறெடுத்துப் பார்த்து விட்டு விடு விடு எனச் சென்று விட்டாள்.

"இவளுக்கும் அந்த வாத்தியாருக்கும் ஏதோ கனக்சனாம்" என எனக்குத் தேவையே இல்லாத தகவலை மிகவும் ஆர்வமுடன் கூறியது எனக்கு ஒருவித எரிச்சலை ஏற்படுத்தியது உண்மையே.

"வேற ஏதாவது அந்த மாஸ்டரைப் பற்றி சொல்லுங்க" எனக் கேட்டதும், "நல்ல உயரமாகவும் உடம்பாகவும் இருப்பார். நெத்தியில திருநீறு சாத்தியிருப்பார்" என்ற இன்னுமொரு தகவலையும் சென்னேன்.

"மாஸ்டருக்கு எத்தன வயதிருக்கும்?"

"ஒரு அறுபத்தஞ்சி எழுபதிருக்கும்" என்றேன்.

"அப்ப கொஞ்சம் வயதான ஆக்களிட்டக் கேப்பம்" என்று அவரது தேடுதலையும் முடுக்கி விட்டார்.

அந்த நேரத்தில் கடைக்கு மோட்டார் சைக்கிளில் வந்த சுமார் எழுபது வயது

## புனித பூமிக்கு வரும் திருப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு



2010ம் ஆண்டின் முதல் பாதியிலேயே புனித பூமிக்குப் பத்து இலட்சம் திருப்பயணிகள் வந்திருப்பது புனித பூமியில் அண்மைக் காலங்களில் காணப்பட்டிருக்கும் ஒரு பெரும் முன்னேற்றம் என்று புனித பூமியின் திருப்பயணப் பொறுப்பாளர் கூறிள்ளார். இவ்வாண்டின் முதல் பாதியில் எடுக்கப்பட்டுள்ள இந்தக் கணக்கு சென்ற ஆண்டு இதே நேரத்தில் எடுக்கப்பட்ட கணக்கைவிட 39 விழுக்காடு அதிகம் என்றும் ஜூன் மாதத்தில் மட்டும் 2.59 இலட்சம் திருப்பயணிகள் புனித பூமிக்கு வந்துள்ளனர் என்றும் திருப்பயணிகளின் பொறுப்பாளரும் பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்தவருமான அருட்தந்தை பியர்பட்டிஸ்டா பிஸ்ஸாபல்லா கூறினார். ஆசிய நாடுகளில் இருந்து வரும் திருப்பயணிகளின் எண்ணிக்கை அதிகமாயிருப்பது குறித்து அருட்தந்தை பிஸ்ஸாபல்லா மகிழ்ச்சி தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கத் தக்கவர் "குமாரசாமி பேப்பர் வந்திற்றா?" எனக் கேட்டார். எனக்கு நம்பிக்கை வந்தது. குமாரசாமி அண்ணன் கண்டிப்பாக அந்தப் பெரியவரிடம் கோபாலசிங்கம் அய்யாவைப் பற்றி விசாரிப்பார். பெரியவருக்குக் கட்டாயம் தெரிந்திருக்கும் ஆனால் குமாரசாமி அண்ணனோ உலகத்திலுள்ள எல்லா விடயங்களையும் பேசினார். உள்ளூரிலுள்ள சியாமளா டீச்சர் பற்றி அதிக நேரம் பேசினார். அதிகமான தகவல்களுடன் இறுதியாகத் தான் என்னைப் பார்த்து விட்டுப் பெரியவரிடம்

"சேர், உங்களுக்கு சைவப்புத்தகம் எழுதிற, தமிழ் படிப்பித்த கோபாலசிங்கம் மாஸ்டரத் தெரியுமா?" எனக்கேட்க பெரியவரோ கவலையாக "அப்பிடி யாரையும் தெரியாதே கிளி!" என்றவர் அரைமணி நேரத்திற்கு மேலாக நின்று நிதானமாக உலக விடயங்களையும் முக்கியமாக சியாமளா டீச்சரின் விடயங்களையும் பேசியவர் சடுதியாகப் புறப்பட்டு விட்டார். அப்பெரியவர் போன பின்னர் குமாரசாமி அண்ணனோ

"தம்பி, இவருக்கு ஊர் விடுப்பெண்டால் நல்ல விருப்பம். பழைய ரிட்டயட் போஸ்ட் மாஸ்ரர்" எனக் கூறினார். "இவருக்குத் தெரியாட்டி ஆளக் கண்டு பிடிக்கிறது கஸ்ரம்தான்! இவருக்குத் தெரியாத ஆள் ஊர் உலகத்தில இல்ல தம்பி" என மேலதிக தகவலையும் பெரியவர் பற்றிக் கூறினார்.


பின்னர், "தம்பி வேற தகவல் இருக்கோ அந்த மாஸ்டரைப் பத்தி" என்று கேட்கவும் எனக்கு அந்தப் புது விடயம் நினைவுக்கு வந்தது. "ஓம் அண்ணன்! அவர் பிள்ளைகளுக்கு இலவசமா ரியூசன் சொல்லிக் கொடுக்கிறவர். தமிழ், சமயம் எல்லாம் படிப்பிச்சிக் குடுக்கிறவர்" என்ற மேலதிக தகவலைப் பெருமையோடு சொன்னேன்.

"இப்ப ஆரு தம்பி சும்மா ரியூசன் குடுக்கிறவங்க. ரியூட்டரியில மணித்தியாலக் கணக்கில காசுக்கு படிப்பிக்கிறவங்கதான் கூட! ஸ்கூல்லயும் இப்ப வாத்திமார் எங்க படிப்பிக்கிறாங்க! எல்லாரும் ரியூசன் குடுத்து உழைக்கிறாங்க. அந்தா காரில போறாரே! அவர் கார் வேண்டினதே ரியூசன் காசில தான் தம்பி" என எனக்குத் தேவையே இல்லாத எரிச்சலை அதிகப்படுத்தும் படியான மேலதிகத் தகவலைத் தந்தார். அப்போது அங்கு வந்த சிறுமியிடம் "புள்ள! உனக்கு பிரியா, தமிழ் ரியூசன் குடுக்கிற கோபாலசிங்கம் மாஸ்டரத் தெரியுமா?" எனக் கேட்டார்.

சிறுமியோ "இல்ல அங்கிள், நான் இப்ப ஸ்கொலசிப் ரியூசனுக்கு மட்டும் தான் போறனான். தமிழுக்குப் போறல்ல. அம்மா அதுக்கெல்லாம் அடுத்த வருசம் போகலாம் எண்டு சொல்லிருக்கா" எனச் சொல்லிவிட்டு வாங்க வந்த பொருட்களை வாங்கிவிட்டுச் சென்று விட்டாள்.

"இப்ப எல்லாப் புள்ளைகளுக்கும் ஸ்கொலசிப் பைத்தியம் புடிச்சிருக்குத் தம்பி. அதுவும் இந்த அம்மாமார்தான் புள்ளைகளைப் போட்டு கஷ்டப்படுத்தி கொல்லுதுகள். சின்ன வயதில விளையாடையும் விடாம விடிஞ்சா அஞ்சு மணியில இருந்து ராவு பத்து மணி வரைக்கும் ஸ்கொலசிப் ரியூசன்தான்" என்று எனக்குத் தேவையற்ற ஆனால் எனக்கும் எதிர்காலத்தில் தேவைப்படப் போகின்ற ஒரு தகவலையும் சொன்னார். எனக்கும் ஐந்தாம் வகுப்பில் எடுக்கும் புலமைப் பரிசில் தேர்வில் முற்றாக விருப்பம் இல்லைதான். ஆனாலும் சிலவேளை ஊரோடு ஓட வேண்டி இருக்கின்றதே! ஏனெனில் நானும் ஒரு சமூகப் பிராணியே!

வெவ்வேறாக மூன்று பேர் கடைக்கு வந்தனர். அவர்களின் பொருட்களைக் கொடுப்பதும் வம்பளப்பதுமாக குமாரசாமி அண்ணன் மேலும் ஒரு இருபது நிமிடங்களைக் கரைத்துவிட்டார். திடீரென என்னைப் பார்த்துவிட்டு



"தங்கத்த கடத்திட்டுப் போறாங்க எண்டு சொல்றியே! உனக்கேது அவ்வளவு தங்கம்?"

"என்ட மனைவிட பேர் தங்கம்"

• மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி மக்களுடன் பகிர்ந்து வாழவேண்டும்" சிலாப ஆயர்



மக்கள் தங்களது செல்வங்களையும் வாழ்வையும் இலங்கையின் வடபகுதி மற்றும் கிழக்குப் பகுதி மக்களுடன் பகிர்ந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்தார் சிலாப மறைமாவட்ட ஆயர் வேலன்ஸ் மென்டிஸ். இந்த உலக வாழ்க்கை நாம் யாருமே கேட்காதபோது இறைவன் நமக்கு அளித்துள்ள ஒரு கொடை. எனவே இந்தக் கொடையைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளவே நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம் என்று ஆயர் மென்டிஸ் கூறினார்.

வந்திருந்த வாடிக்கையாளர்களிடம்

"உங்களுக்கு யாராவது கோபாலசிங்கம் எண்ட மாஸ்டரத் தெரியுமா? தமிழ் டியூசன் குடுக்கிறவராம், உசரமானவராம், சைவப்புத்தகங்களும் எழுதுறவராம். இந்தத் தம்பி வெளியூரில இருந்து வந்திரிக்கார். அவரப் பார்க்கோணுமாம்" எனக் கூறினார்.

அவர்களில் எவருக்குமே கோபாலசிங்கம் ஐயாவைப் பற்றித் தெரியவில்லை. எனக்கோ இப்போது எரிச்சலை விடக் கவலையே மேலோங்கி நின்றது.

"என்ன உலகம் இது! எவ்வளவோ நல்ல பல வேலைகளைச் செய்யும் ஒரு சமூக உணர்வு மிக்க படித்த தமிழ் ஆசிரியரை, அதே இடத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ஒருவரைத் தெரியாது உள்ளனரே!" என் கவலை என்னை அழுத்த இறுதியாக என்னிடமிருந்த ஒரேயொரு ஆயுதத்தை பிரயோகிக்கலாம் என எண்ணினேன். இதுவரை அதைப் பாவிக்கக் கூடாது என்ற எண்ணமும் திடமும் இப்போது நொருங்கி விட்டது. எனது விருப்பத்திற்குரிய கோபாலசிங்கம் ஐயாவைப் பார்க்க மட்டுமே சுமார் முன்னூற்றைம்பது கிலோ மீற்றருக்கு மேலாக இரவில் பயணம் செய்து வந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமல்லவா? அதனால் அந்த இறுதி ஆயுதத்தையும், விருப்பமே இல்லாமல் இருந்தால் கூட, பிரயோகிக்கலாம் என்று அதையும் பிரயோகித்தேன். "கோபாலசிங்கம் அய்யாவுக்கு சின்ன வயதில தலை முடியெல்லாம் கொட்டுப்பட்டு இருக்கிறதால அவருக்கு ஒரு பட்டப் பேர் சொல்லிக் கூப்பிடுவாங்க" அவரது பட்டப்பேரைத் தவிர்த்துவிட்டுக் கூறினேன்.

உடனடியாகக் குமாரசாமி அண்ணன் "ஓ! சொட்ட வாத்தியாரா?" எனக்கேட்டார்.

நானும் "ஓம் அண்ணன்" என்றேன்.

"இத நீங்க நேரத்தோட சொல்லியிருக்கலாம் தானே! சொட்ட வாத்தி எண்டு! அவரு இப்பதான் முணு மாசத்துக்கு முன்னால செத்துப் போயிட்டார். அவர்ர வீடு நாலு கட தள்ளி இடக்கைப் பக்கம் மூணாவது வீடு தம்பி!" என ஏதோ ஆர்க்கிமீடிசும் கொலம்பசும் கண்டு பிடித்தது போலப் பெருமையாகச் சொன்னார்.


பக்கத்துத் தெருவில் உள்ள, படித்த, சமூக அக்கறையுள்ள, ஓரே ஊர்க்காரரான ஒரு சக மனிதரின் எத்தனையோ நல்ல குணங்களை விட்டுவிட்டு அவரது பட்டப் பெயரை மட்டுமே வைத்து அடையாளம் கண்ட குமாரசாமி அண்ணனையா அல்லது ஊர்க்காரர்களையா திட்டுவது – மெச்சுவது? "என்ன உலகமிது?" என எண்ணிக்கொண்டு திரும்பவும் ஊர் புறப்படத் தயாரானேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## அர்த்த ஹலாசனம்



### செய்முறை

- விரிப்பின் மீது கால்களை நீட்டி ஒன்று சேர்த்து மல்லாந்து படுக்கவும்.
- கைகளை தலைக்கு மேல் நீட்டி வைக்கவும்.
- இரண்டு கால்களையும் தரையில் இருந்து இடுப்போடு L போல் மடித்து வைக்கவும்
- கைகளை இடுப்புக்குக் கொணர்ந்து தரையில் வைக்கவும்.
- ஆசன நிலையில் இயல்பான சுவாசத்தில் இருக்கவேண்டும்.
- 10 முதல் 20 வினாடி வரை செய்யலாம்.
- மூன்று முறை செய்தால் போதுமானது.
- பின் இயல்பு நிலைக்கு வந்து ஓய்வு எடுக்கவும்.

### இதனால் ஏற்படும் பலன்கள்

- உடல் பதட்டத்தைப் போக்குகிறது.

தசை மண்டலம், நரம்பு மண்டலம் புத்துணர்ச்சி பெறுகிறது.

- வயிறு புத்துணர்ச்சி பெறுகிறது.
- இரத்த ஓட்டம் சீராகும்.

### இதனால் தீரும் நோய்கள்

- வயிறு, வாயுக் கோளாறுகள் மறையும்.
- உடல் எடை குறையும்.
- மூலவியாதி குணமாகும்.
- முதுகு வலியைப் போக்குகிறது.
- மாதவிடாய்க் கோளாறுகளைப் போக்குகிறது.

### குறிப்பு

- கால் தூக்க இயலாதவர்கள் சுவரோடு சாய்ந்து பழகலாம்.

### மாற்று ஆசனங்கள்


- சலபாசனம்
- புஜங்காசனம்

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar (India)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒலி மாசின் மூலக் காரணங்கள்

**01. இயற்கைக் காரணங்கள்:** இடி, உயர் செறிவுள்ள மழை, புயல் மற்றும் சூறாவளி போன்றவை

**02. மனிதரால் உருவாக்கப்படுபவை:** கட்டுமான வேலைகள், போக்குவரத்து வாகனங்கள், வானூர்திகள், தொடர்வண்டிகள், வணிக வளாகங்கள், தொழிற்சாலைகள், சமய நிகழ்ச்சிகள், குடும்ப விழாக்கள், ஒலிபெருக்கியைப் பயன்படுத்துதல் ஆகியன.

ஒலி மாசு வளிமண்டல மாசுபாட்டின் ஒரு வகையாகக் கருதப்படுகிறது. மனித செவிகள், ஒலி அலைகளை உள்வாங்கி அவற்றை ஒலிக் குறிப்புகளாக மாற்றி மூளையில் கேட்புப் புலனுணர்வாக உருவாக்குகிறது. மனிதர்கள் இயல்பாகக் கேட்கக்கூடிய ஒலியின் அலைவு (Frequecy) 20 ஹெர்ட்ஸ் முதல் 20,000 ஹெர்ட்ஸ் (Hertz). ஒலியின் செறிவு டெசிபெல் (Decibel) என்ற அளவீட்டினால் அளக்கப்படுகிறது. ஓர் ஒலியை இனங்கண்டுகொள்ளும்படியான செறிவினை குறைந்தபட்ச கேட்பு அளவாகக் கருதலாம். இரைச்சலுக்குத் தொடர்ச்சியாக செவிமடுப்பவர்களின் உட்செவி பாதிக்கப்படும், கேட்புத் திறன் அற்றுப்போகும்.




செவித்திறன் குறைபாடு தொடர்ந்தால் ஒருவரால் குறைவான அலைவுடைய ஓசையைக் கேட்பது இயலாததாகிறது. எல்லா மனிதர்களும் ஒரேவிதமான ஒலிகளால் ஒரே விதத்தில் பாதிக்கப்படுவதில்லை. அன்றாடம் நாம் கேட்கும் ஒலிகளைப் பற்றி நாம் அக்கறை காட்டுவதில்லை. மாறுபட்ட சூழ்நிலைகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அன்றாட ஒலிகள் நமது இயல்பான பணியைப் பாதிக்கக்கூடும். இது நிகழும்போது ஒலிகள் இரைச்சலாக மாறுகின்றன. ஒரு நபருக்கு இரைச்சலாகப் புலப்படும் ஒலி, வேறொருவருக்கு இதமான





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசையாக இருக்கலாம். சான்றாக: சிறிய நகரமொன்றில் வாழும் தம்பதியரில், மனைவிக்குக் காலையில் கூவும் சேவலின் ஓசை பொழுது புலர்வதைக் குறிக்கும் இனிய ஒலியாகக் கருதப்படுகிறது. ஆனால், கணவரால் அந்த ஓசையைப் பொறுக்க முடியவில்லை. அவருக்கு அது மிகுந்த எரிச்சலை ஏற்படுத்துகிறது. தொடர்வண்டியின் சீழ்க்கையொலி, குழந்தைகளின் விளையாட்டு, இசைநிகழ்ச் சியின் போது ஒருவரின் இருமல், திரைப்படத்தின்போது சிலரின் பேச்சு ஆகியன எரிச்சல் ஏற்படுத்தும் ஒலிகளுக்கான சான்றுகள்.



ஒழுங்கமைவுடைய ஒலி வடிவங்கள் உருவாக்கும் மாறுபட்ட ஒலி பொதுவாக இதமான இசையாக மிளிர்கிறது. ஒழுங்கற்ற ஒலி வடிவங்கள் பெரும்பாலும் இரைச்சலாகவே கருதப்படுகிறது.

மனித குரலினால் உருவாக்கப்படும் ஒலி வடிவங்கள் ஒழுங்கான மற்றும் ஒழுங்கற்ற ஒலி வேகத்தைக் கொண்டுள்ளன. நல்ல செவித்திறன் உடைய ஒரு நபர் 20Hz முதல் 20,000Hz வரையிலான அலையதிர்வினை கேட்க இயலும்.

2000Hz முதல் 8000Hz வரை உள்ள அலையதிர்வு மிகவும் எரிச்சலூட்டுபவை. 500Hz குறைவாகவும், 10,000Hzக்கு அதிகமாகவும் உள்ள அலையதிர்வுகள் குறைவாக எரிச்சலூட்டுவதாகக் கருதப்படுகிறது.

### எரிச்சலூட்டும் இரைச்சல்

ஒரு ஒலியின் செறிவு அல்லது அதிர்வினால் அது எரிச்சலூட்டுவதாக அமைவதில்லை. திரும்பத் திரும்ப நிகழுந் தன்மை, அதனால் ஏற்படும் கவனச் சிதைவு, அதன் கட்டு மீறிப் போகும் நிலை ஆகியவையே அதற்குக் காரணங்கள்.

60 டெசிபெல்கள் (dB) உடைய ஒலி இயல்பான உரையாடல். சாதாரண நகர்ப்புற அல்லது புறநகர்ப் போக்குவரத்து 70dB உடையது. 1991ம் ஆண்டில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின்படி இரைச்சல் என்பது முக்கியமான சுற்றுச் சூழல் பிரச்சினையாகக் கருதப்படுகிறது. மக்களுக்குச் சிலவேளைகளில் காற்று மாசு அல்லது குடிநீர் தரம் பற்றிய கவலையை விட ஒலிமாசு மிகுந்த எரிச்சலூட்டுகிறது.

**• விஜித்தா பிள்ளை**



## குறும்(புப்)பா - 50

என்வீட்டி லொருபூனைக் குட்டி
எலிபிடிக்கும் வேலையதில் சுட்டி
இனியபா லூட்டிமீன் சோறூட்டி என்னபயன்
இணைகண்டு ஓடியது ஓட்டி

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு
மட்டும்

முடிவுத்திகதி
15- 11 - 2010




# விவிலியம் கற்போம் - 92

(எண்ணிக்கை 28:1-31)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடம் கூறியது; நீ இஸ்ரயேல் மக்களுக்குக் கட்டளையிட்டுச் சொல்; எனக்குரிய நேர்ச்சையை, நெருப்புப் பலியான உணவை, எனக்கு உகந்த ........................................ குறிக்கப்பட்ட காலத்தில் எனக்குப் படைப்பதில் நீங்கள் கருத்தாயிருக்க வேண்டும். நீ அவர்களிடம் சொல்; நெருப்புப் பலியாக நீங்கள் ஆண்டவருக்குப் படைக்க வேண்டியது; அன்றாட எரிபலியாக எந்நாளும் ஒரு வயதுடைய ........................................ இரண்டு ஆட்டுக்குட்டிகள், இவற்றுள் ஒன்றைக் காலையிலும், மற்றதை மாலையிலும் பலியிட வேண்டும். அத்துடன், இருபதுபடி மரக்காலில் பத்தில் ஓர் அளவு மிருதுவான மாவை அடித்துப் பிழியப்பட்ட கால் கலயம் எண்ணெயுடன் பிசைய வேண்டும்; இது எந்நாளும் செலுத்தும் ........................................; இது சீனாய் மலையில் ஏற்படுத்தப்பட்டது. அத்துடன் ஒவ்வோர் ஆட்டுக்குட்டிக்கும் கால் கலயம் வீதம் நீர்மப் படையல் நீங்கள் செலுத்த வேண்டும். மற்ற ஆட்டுக் குட்டியை நீங்கள் மாலையில் பலியிட வேண்டும். ஓய்வு நாளில், ஒரு வயதுடைய இரண்டு ........................................, மாவையும், அத்துடன் நீர்மப் படையலையும் செலுத்த வேண்டும். எந்நாளும் செலுத்தும் எரிபலியும் நீர்மப் படையலும் நீங்கலாக இது ஒவ்வோர் ஓய்வு நாளிலும் செலுத்தப்பட வேண்டிய எரிபலி ஆகும். மாதத் தொடக்கத்தில் எரிபலியாக ........................................ இரண்டு; ஆட்டுக் கிடாய் ஒன்று; ஒரு வயதுடைய ஆட்டுக்குட்டிகள் ஏழு; இவை பழுதற்றவையாக இருக்க வேண்டும். அவற்றுடன், உணவுப் படையலுக்காக இருபதுபடி மரக்காலில் பத்தில் மூன்று அளவு மெல்லிய மாவு; எண்ணெயில் பிசைந்த பத்தில் ........................................ மெல்லிய மாவு; எண்ணையில் பிசைந்த பத்தில் ஒரு பங்கு மெல்லிய மாவு ஆகியவை நெருப்புப் பலிக்காக இருக்கவேண்டியவை. நீர்மப் படையல்களுக்கான திராட்சை இரசம் காளை ஒன்றுக்கு அரைக் கலயம் ........................................ ஆட்டுக்கிடாய் ஒன்றுக்கு மூன்றில் ஒரு கலயம் ........................................ ஆட்டுக்குட்டி ஒன்றுக்கு ........................................, ஆகிய இவை ஆண்டில் ஒவ்வொரு மாத்திற்குமுரிய எரிபலி. எந்நாளும் செலுத்தப்படும் எரிபலியும் நீர்மப் படையலும் நீங்கலாக ஆண்டவருக்கு ஒரு வெள்ளாட்டுக்கிடாய் செலுத்தவேண்டும். முதல் மாத ........................................ ஆண்டவரின் பாஸ்கா. பதினைந்தாம் நாள் திருவிழா. ஏழு நாள்களும் புளிப்பற்ற அப்பமே உண்ணவேண்டும். முதல் நாளில் திருப்பேரவை கூட்டப்படும். நெருப்புப் பலியொன்றை, எரிபலியொன்றை ஆண்டவருக்குச் செலுத்தவேண்டும். ஏழாம் நாள் ........................................ கடினமான வேலையேதும் செய்யக்கூடாது. நறுமண எரிபலியும் உணவுப் படையலும் செலுத்துவீர்கள். ஏழு ஆட்டுக் குட்டிகளில் ஒவ்வொன்றுக்கும் இரண்டுபடி என்ற அளவில் இருக்கும். மேலும் உங்களுக்கு ........................................ வெள்ளாட்டுக்கிடாய் தேவை. இவையும், இவற்றின் படையலும், எந்நாளும் செலுத்தும் எரிபலியும், அதன் உணவுப் படையலும் நீங்கலாக நீங்கள் படைக்கவேண்டும். இவை பழுதற்றவையாய் இருக்கவேண்டும்.

**விடைகள் :** **இருபங்கு, பதினான்காம் நாள், கறைநீக்கம், கால் கலயம், பழுதற்ற, ஆட்டுக் குட்டிகளையும், திருப்பேரவை நாள், இளங்காளைகள், எரிபலி, நறுமணத்தை**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 92

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பித்த ஆண்டு
   (1951, 1949, 1952)

2. கிறிக்கட் உலகின் தந்தை என அழைக்கப்படுபவர்
   (ஸீரீவோ, பிரட்மன், சச்சின்)

3. பசியை அடக்கும் என இசைப்பிரியர்களால் குறிப்பிடப்படும் இராகம்
   (கீரவாணி, பத்மப்பிரியா, கரகரப்பிரியா)

4. மிக விரைவாகச் சூரியனைச் சுற்றிவரும் கோள்
   (புதன், வியாழன், சனி)

5. அரசன் அன்றறுப்பான் .............................................. நின்றறுக்கும்
   (அதர்மம், தெய்வம், உண்மை)

6. அன்றை எனுஞ் சொல் அற்றை என வருவது
   (குறுக்கல் விகாரம், தொகுத்தல் விகாரம், வலித்தல் விகாரம்)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................


..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 92
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போட்டி முடிவுகள்

## விவிலியம் கற்போம் - 90 விடைகள்

மூதாதையர், எகிப்து, காத்து, செபுலோன், பெஞ்யமின், நப்தலி, உரிமை, இஸ்ரயேல், பாலை, ஒருவனும்

## அறிவை வளர்ப்போம் - 90 விடைகள்

1) 1857 2) ஸ்ரார் வோர்ஸ் 3) இந்தியா 4) செவ்வாய்
5) சிலப்பதிகாரம் - மணிமேகலை 6) கதவை(த்) திறந்தேன்

**பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி ரூபா 200/= பரிசு பெறுபவர்**

- இக்னேஷியா இதயராஜ்
  தேன் தமிழ் வீதி, உவர்மலை
  திருகோணமலை

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- றணிஸ்டா றொசாயிறோ
  பன்சாலை வீதி
  கல்முனை
- மு. அபிநயா
  8ம் குறுக்கு, திராய்மடு
  மட்டக்களப்பு

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 42 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  கெவின் ஜோசப்
  93/44, நீதிமன்ற வீதி
  திருகோணமலை
- **இரண்டாம் பரிசு** - 200/=
  வி. ஹரிகரன்
  194, 3ம் ஒழுங்கை
  ஆனந்தபுரி
  திருகோணமலை
- 3ம் **பரிசு** - 100/=
  நே. லிக்ஷன்
  மாமாங்கம் வீதி
  புன்னைச்சோலை
  மட்டக்களப்பு

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றில் கலந்துவரும்.....

இலங்கை வானொலி தேசிய சேவையில்
கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்

**நவம்பர்- 2010**

கத்தோலிக்க நற்சிந்தனை - காலை 5.55 மணி

நாள்: 06, 07, 08, 09, 10, 11, 12, 20, 21, 22, 23, 24, 25, 26

சிறுவர் உலகம் - மாலை 7.00 மணி

நாள்:- 16, 30

புதிய உலகம் - மாலை 7.00 மணி

நாள்:- 14, 28

நிகழ்ச்சித் தொகுப்பு: மலர்வேந்தன்

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம், அ.பெ. எண் - ௪௪, மட்டக்களப்பு.

**சனி, ஞாயிறு தினங்களில்:** செபம், கத்தோலிக்க நற்சிந்தனை
சக்தி FM, காலை 5.30 மணி
வழங்குபவர்: அருட்தந்தை நொஹான் பேணாட்

## நத்தார் புத்தாண்டுச் சிறப்பிதழ்

எதிர்வரும் டிசம்பர் - ஜனவரி மாதங்களை இணைத்து
தொண்டன் சிறப்பிதழ் விரிக்கும்.
சிறப்பிதழைச் சிறப்பிக்க எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்களிடமிருந்து
ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம்!
சுவையாக, சுருக்கமாக எழுதுங்கள்!

**அனுப்பவேண்டிய இறுதிநாள் 2010 நவம்பர் 15**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org